வெளியிட்டிருக்கிறோம். மறக்காமல் வாங்கிப் படியுங்கள்.

இனி தொடர்ந்து "சூப்பர் ஹிட் நாவல்" தில் திரிலான சம்பவங்களை படிக்க காத்திருங்கள்.

வழக்கம் போலவே இதழை படித்து முடித்ததும் உங்கள் எண்ணங்களை எழுத்தாக எங்களுக்கு எழுதி அனுப்புங்கள்.

உங்கள் சிறுகதைகள், ஜோக்ஸ் கவிதைகள் வழக்கம் போலவே வரவேற்கிறோம்.

நன்றியுடன்

ஆசிரியர்

ஆர். முரளி


**வாசகர்கள் கவனத்திற்கு...**

சிறுகதைகள், கவிதைகள், ஜோக்ஸ் அனுப்ப வேண்டிய முகவரி

**சூப்பர்ஹிட் நாவல்**

நெ. 64/2, நாட்டு சுப்பராயன் தெரு,
மைலாப்பூர், சென்னை - 600 004.




# ஆர்த்திக்கு ஆபத்து

## ராஜேஷ் குமார்

இந்த நாவலின் ஆரம்ப வரியான இந்த வரியில் விஸ்வத் படிகளில் தடதடத்து வந்து கொண்டிருந்தான். மணிக்கட்டை உயர்த்தி நேரம் பார்த்த போது டிஜிட்டலில் 5.04 - ஒளிர்ந்தது. வலது கையிலிருந்த பிராஸ்லட் ஆடியது. 'மொசைக் படிகள் முடிந்து ஹாலில் அவன் கால்கள் பதியும் முன்பாக அவனைப் பற்றிக் கொஞ்சம் சொல்லி விடலாம். சின்ன அறிமுகம்.

நியூமராலஜி மோகத்தில் அப்பா, அம்மா வைத்த விசுவநாதன் என்கிற பெயரை விஸ்வத் என்று மாற்றிக் கொண்டிருக்கிற விஸ்வத்தின் கைகள் எந்த அழகான காட்சி யையும் பிரஷ்ஷில் தீற்றப் பரபரக்கிறவை. பிறவிஓவியன். ஓவியக்கல்லூரியில் முலாம் பூசிக் கொண்டவன். தமிழக அளவில் இரண்டு தரம் அவார்டு வாங்கினவன். தேசிய ரீதியில் முயற்சித்துக் கொண்டிருக்கிறவன்.

கிட்டதட்ட ஆறடி உயரத்துக்குக் கிடுகிடு வென்று வளர்ந்த போது உயரத்தை நிறுத்த ஏதாவது டானிக் சாப்பிடலாமா என்று கவலைப்பட்டவன். தற்போதைய உயரம் ஆறு அடி, மூன்று அங்குலம். ஆர்ட் தீட்டுகிற

நேரங்களில் மட்டும் நாசியின் மேல் கண்ணாடி தொற்றிக் கொள்ளும். விஸ்வத் என்று சொன்னாலே அவனை தெரிந்தவர்களுக்கு பைஜாமா வகையறாவில் பொதித்த ஒரு உருவம் தான் நினைவுக்கு வரும்.

படியிறங்கலை முடிந்திருந்த விஸ்வத்துக்கு சோபாவில் நிரம்பியிருந்த அப்பா சண்முக வேலாயுதம் நாளிதழ் ஒன்றில் மூழ்கித் தெரிந்தார்.

சில்க் சர்ட், சில்க் வேஷ்டியில் சிக்கியிருந்த சண்முகவேலாயுதம் நாற்பத்தைந்து வயதை முதல் பார்வையில் அனுமானிக்க வைப்பார், நிஜவயது நாற்பத்தெட்டு. இன்னும் கண்ணாடித் தேவையை ஏற்படுத்திக் கொள்ளாதவர், மீசை, காதோரங்களில் முடி நிறமிழக்க ஆரம்பித்து. இருபத்தைந்து வயதிலிருந்தே குளிப்பது, சாப்பிடுவது, தூங்குவது போன்ற அன்றாட கடமைகளில் ஒன்றாய் ஷேவிங்கும் ஆகியிருந்தது. சிரித்தால் தெரிகிற பல் வரிசையில் இந்த வயதிலும் ஒரு கவரல் இருந்தது.

நடந்து வருகிற விஸ்வத்தால் நாளிதழி லிருந்து கலைக்கப் பட்டு நிமிர்ந்தார். அவன் ஆள் காட்டிவிரல் சுழற்றுகிற கார் சாவியை கவனித்துப் புருவ இடைவெளியைக் குறைத்தார்.

"எங்கடா கிளம்பிட்டே?"

"பீச் பங்களாவுக்கு"

"வரையவா"

"ம்."



"ஆர்த்தியும் வர்றாளா?"

"நானா கூப்பிடலை அவதான் வர்றேன்னு சொன்னா..."

"ஏண்டா... நீங்க பங்களாபோய்ச் சேர அஞ்சு நாற்பத்தஞ் சாயிடும்... அப்புறம் கொஞ்ச நேரத்தில் இருட்டிடும... அந்த இருட்டுல என்னத்தைப் பார்த்து வரையப் போறே?"

"இன்னிக்கு நானும் ஆர்த்தியும் அங்கேயே ஸ்டே பண்ணிக்கப் போறோம்... ராத்திரி எபக்டை என்னோட சீனரியோவுக்கு கொண்டு வரணும்..."

"ராத்திரியும் பகலுமா வரைஞ்சிட்டே இரு... பிசினஸை கவினிக்க வராதே...?"

சலித்த அப்பாவை முறைத்தான்.

"அப்பா... ஆர்ட்டை ரசிக்கிறதுக்கெல்லாம் தனி ரசனை வேணும்... இது ஆகஸ்ட் மாசம். சன் செட் ஈஸ்ட்-நார்த் சைட்ல நடக்கும்... நம்ம பங்களால ரைட் சைட் ஜன்னல் எதையாவது திறந்தா... சவுக்குத் தோப்பை ஊடுருவி சன் செட்டிங் தெரியும்... ஃப்ரிஜ்ல வெச்ச ஆப்பிள் மாதிரி சூரியன் தகதகன்னு மின்னிட்டே..."

"ஆமாடா... நான் உன்னை மாதிரி சூர்யோ தயத்தையும் அஸ்தமனத்தையும் பார்த்திட்டு இருந்திருந்தேன்னா இன்னிக்கு குடியிருக்க ஒரு பங்களா...நீ வரையறதுக்காக பீச் சைட்ல ஒரு பங்களான்னு இத்தனை வசதிகள் வந்திருக்காது..."

"அப்பா... நான் உங்க பிஸினஸுக்கு உதவியா இல்லேன்னு உங்களுக்கு கோபம்...

ஒரு முணு மாசம் பொறுங்கப்பா... இந்த இன்டர் ஸ்டேட் காம்படீஷன்ல-பரிசைத் தட்டி-நான் யார்ங்கிறதை இந்த இந்தியாவுக்கு காட்டிட்டு-உங்க பிஸினஸுக்கு வர்றேன்... ஓகே..."

"என்னமோ செய்" - என்று சலித்தபடி சண்முவேலாயுதம் மறுபடியும் பேப்பர்க்குள் நுழைந்து கொள்ள -

சிரித்தபடி விலகின விஸ்வத்தை காபியை ஆற்றிக் கொண்டு வரும் மரகதம் எதிர் கொண்டாள்

"அம்மா... எங்கேம்மா என் சீமாந்த புத்திரி...? சீக்கிரம் வரச் சொல்லு..."

"ட்ரெஸ் பண்ணிட்டிருக்காடா..."

-என்று விஸ்வத்துக்கு பதில் சொன்ன ம்ரகதம் ஜரிகை அகிமாயிருந்த பட்டுப் புடவையை உடலுக்குச் சுற்றியிருந்தாள். நாசியின் மேல் கண்ணாடி ஏறியிருக்க-இப்போதைய பத்மினியின் சாயல் அடிக்கத் தெரிந்தாள்.

"ஆர்த்தி மேக்கப் ரூமுக்குள்ள புகுந்தாள்னா குறைஞ்சது ரெண்டு மணி நேரமாயிடும்..."

சலிப்போடு அம்மாவிடம் சொல்லிவிட்டு மேக்கப் அறை இருந்த திசையைப் பார்த்துக் கத்தினான்.

"ஆர்த்தி... ஏய்... ஆர்த்தி... சீக்கிரம் வந்து தொலை...! நீ வர்றதுக்குள்ளே சூரியன் கடலுக்கு போயிடுவான்."

சண்முகவேலாயுதம் புன்னகையோடு பேப்பரைத் தாழ்த்தி சொன்னார்.



"விஸ்வத்... உனக்கு டிராயிங்ல இன்டரஸ்ட்... அவளுக்கு மேக்கப்புல இன்ட்ரஸ்ட்...!"

"வந்துட்டேண்ணா... அதுக்குள்ள ஏன் பறக்கறே...?"

கேட்டபடியே அந்தக் கதவுக்குள்ளிருந்த வெளிப்பட்டாள் ஆர்த்தி.

இருபத்தோரு வயது ஆர்த்தி வெளிர் பச்சை சல்வார் கம்மீஸுக்குள் புதைந்திருந்தாள். எந்த இடத்தில் எத்தனை பேருக்கு மத்தியில் நின்றிருந்தாலும் இருபத்தைந்து வாட் பல்புகளுக்கிடையே எரிகிற நூறு வாட் பல்பு மாதிரி பிரகாசத்தனத் தோடு ஒளிர்வாள். விஸ்தாரமான கண்களில் எந்நேரமும் குளிர்பான விநியோகம் நடந்துக்கொண்டு இருந்தது. ட்ரீம் செய்த மாதிரி நேர்த்தியான புருவங்கள். உதட்டுக்குக் கீழே ஒரு திருஷ்டி பொட்டு வைத்த மாதிரி கருவிலேயே மச்சம் வாங்கியிருந்தாள்.

மெடிக்கல் காலேஜில் ஃபைனல் எக்ஸாமினேஷன்களை எழுதி முடித்து விட்டு ரிஸல்ட்டுக்காகக் காத்துக் கொண்டு இருப்பவள். தனியே ஆர்ட் வரையும் அண்ணன் விஸ்வத்துக்குக் கம்பெனியாய், அவ்வப்போது காபி, டீ, டிபன், இத்யாதி... உதவிகளை செய்து கொண்டு ஜன்னல் வழியே பீச்சை வேடிக்கை பார்க்க அவனோடு செல்கிறவள்.

"போகலாமா...?"

"ம்... போஸ்டர் ஒயிட் தீர்ந்து போச்சுன்னு சொன்னே... எடுத்து வச்சிட்டியாண்ணா?"

"ம். வச்சிட்டேன்..."

"எதையாவது மறந்திருந்தா எடுத்துக்க... அங்கே போய் நெத்தியைத் தட்டிக்காதே..."

"தட்டிக்க மாட்டேன் வா... கிழவி..."

இருவரும் சண்முகவேலாயுதத்திடமும், மரகதத்திடமும் விடைப் பெற்றுக் கொண்டு போர்டிகோவுக்குள்ளிருந்த காரின் முன் சீட்டுகளை நிரப்பினார்கள். விஸ்வத் டிரைவிங் இருக்கையில் ஸ்டீயரிங்கை கையாண்டான்.

கார் நகர்ந்தது.

அப்பாவுக்கும் அம்மாவுக்கும் ஜன்னல் வழியே கையசைத் தாள் ஆர்த்தி.

காம்பௌண்ட் கேட்டைத் தாண்டி - நகரச் சாலைகளில் கார் நிதான வேகத்தில் பயணப்பட்டது.

ஆர்த்தி கூந்தலை - தன் பொன்னிற வலது கை விரல்களால் ஒதுக்கிக் கொண்டே-

"ஏண்ணா?" என்றாள்.

"சொல்லு..."

"இந்த இன்டர் ஸ்டேட் ஆர்ட் காம்படீஷன்ல மொத்தம் எத்தனை பேர் பார்ட்டிசிபேட் பண்ணுவாங்க...?"

"ஏறக்குறைய ஐநூறு பேர்..."

"நீ என்ன தலைப்பை செலக்ட் பண்ணியிருக்கே..."

"சூரியன் மரணப்படுக்கை..."

"அதாவது அஸ்தமனம்!"

"ஆமா..."

கார் கடற்கரை ரோட்டில் திரும்பி வேகம் பிடித்தது. சில நிமிஷ நேரத்தில் பட்டின



பாக்கத்தைத் தாண்டி - சென்னையில் ஆர்பாட்டமில்லாத ரோட்டில் கார் சீறியது.

"பர்ஸ்ட் ப்ரைஸ"க்கு என்ன ரிவார்டு."

"பைவ் சவரன்ல... கோல்ட் டாலர்."

"பிசாத்து..." என்றாள் ஆர்த்தி.

"நான் வரையப் போகிற நல்ல மூடுல போயிட்டிருக்கேன்... உன்னோட வாயைத் திறக்காமே வா... ஆர்த்தி..."

ஆர்த்தி பொய்க் கோபத்தோடு நகர்ந்து உட்கார்ந்து கொண்டாள், கார் வேகம் பிடித்து-

சவுக்கு மரத் தோப்புகளுக்கு மத்தியில் தெரிந்த சிதிலமாகிற ரோட்டில் ஓடி-

கொஞ்சம் தொலைவில் மரங்களுக்கு மத்தியில் உட்கார்ந்திருந்த பங்களாவை நோக்கி ஓடியது.

சரியாய் ஐந்து ஐம்பதுக்கு அந்த பங்களாவை அருகாமை படுத்தினது கார்.

நிசப்தமான ஏரியா. சுற்று வட்டாரத்தில் அரை கிலோ மீட்டர் சுற்றளவுக்கு வேறெந்த வீடும் தட்டுப்படவில்லை. வெறும் சவுக்குத் தோப்பு, பச்சையாய் ஊசி ஊசியாய் நெருக்கமான மர வளர்ச்சி, ஊஊய்ய் ஊஊ...ய்ய் யென்று காற்று மர இடைவெளிகளில் புகுந்து பாட்டு பாடினது. கொஞ்சம் தூரத்தில் கோலமாவை கொட்டின சைஸில் பீச் மணல், அதை தாண்டி கோபால்ட். நீல நிறத்தில காயப்போட்ட சேலையாய் கடல்.

காம்பௌண்ட் கேட்டுக்குள் நுழைந்து மவுனமாகி நின்றது கார்.

ஆர்த்தி கதவைக் 'கிளிக்' கிக் கொண்டு இறங்கினாள்.

இறங்கி விஸ்வத்தை எறிட்டாள். பொய்க் கோபம் எப்போதோ காணாமல் போயிருந்தது.

"நிஜமாவே அருமையான பங்களாவை செலக்ட் பண்ணி வாங்கியிருக்கார் அப்பா... இங்கே வந்தா எனக்கும் வரைய ஆசை வருது...!"

விஸ்வத் புன்னகைத்தான்.

"இன்னிலேர்ந்து ஆரம்பிப்போமா... நீயும் ஆர்ட் பண்றியா?"

பலமாய் தலையசைத்தாள்.

"அம்மாடி எனக்கு ஆர்ட்டெல்லாம் ஒத்து வராது... அந்த அளவுக்கு பொறுமை பத்தாது."

"நீயெல்லாம் ஒரு டாக்டர்! பேஷன்ட்ஸை பொறுமையோட தான் ட்ரீட் பண்ணணும் தெரியுமா...?"

சொல்லிக்கொண்டே சாவியை பாக்கெட்டினின்று எடுத்து - பூட்டின் வாய்க்குள் பொருத்தினான் விஸ்வத்.

பூட்டு விடுபட்டது - கதவுகளைத் திறந்து உள்ளே போனார்கள்.

சாத்தியிருந்த ஜன்னல்களையெல்லாம் திறந்து வைத்தார்கள். கர்ட்டன்களை ஓரம் ஒதுக்கிவிட்டார்கள். தூசி துடைத்துவிட்டு நிமிர்ந்த போது -

மணி ஆறு பதினைந்து ஆகியிருந்தது.

மேற்கு திசையில் சூரியன் மேகங்களுக்கு மத்தியில் சிக்கி முகம் சிவந்து கொண்டிருந்தான்.



விஸ்வத் சரியாயிருந்த டிராயிங் போர்ட்டைத் துடைத்தான்.

ஷீட் ஃபிக்ஸ் பண்ணினான்.

வாக்மேனை எடுத்துக் காதில் பொருத்திக் கொண்டு -

"அண்ணா டீ போட்டுக் கொண்டு வர்றேன். சாப்டுட்டே ஆரம்பி..."

சொல்லிவிட்டு விஸ்வத்தின் பதிலை எதிர்பார்க்காமல் கிச்சன் இருந்த திசையில் நடை பெயர்த்தாள் ஆர்த்தி.

அடுத்து வந்த நிமிஷங்களில் விஸ்வத் வண்ணங்களை சேர்த்து காம்பினேட் பண்ணினான். ஆர்த்தி டீ, டிபன் ப்ரிப்பேர் பண்ணி விட்டு சும்மா இருந்த நேரத்தில் டி.வி. பார்த்தாள். இருட்டில் விழுகிற கடலைப் பார்த்தாள். ஒன்பது மணிக்கு இருவரும் சாப்பிட்டுவிட்டு - ஆர்த்தி கொட்டாவி விட்ட வாயோடு - குட் நைட் சொல்லிக் கொண்டே தூங்கப் போனாள்.

அடுத்த நாள் காலை நேரப் போகிற ஒரு பயங்கரத்தை உணராமல்-விஸ்வத்-வாக்மேனை காதில் மாட்டிக் கொண்டு தூரிகையை கலர் க்ளோப்பில் தோய்த்து-ஓவியத்தை பின்னிரவு நேரம் வரைக்கும் டச் பண்ணிக் கொண்டிருந்தான்.

## 2

ஆர்த்திக்கு விழிப்பு தட்டிய போது வெண்டிலேட்டர் வழியே வைகறை வெளிச்சம்.

படுக்கையில் புரண்டு ஜன்னல் கர்ட்டனை விலக்கிப் பார்த்தாள். வெளியே இருட்டு இன்னும் கொஞ்சம் பிடிவாதத்தோடு- மசமசத் தனமாய் இருந்தது. கடல் பறவைகளின் இரைச்சல் அந்த நேரத்துக்கு காதில் ஜலதரங்கம் வாசித்தது.

ஆர்த்தி போர்வையை உதறி தள்ளிவிட்டு எழுந்தாள். பீறிட்டு வந்த கொட்டாவியை புறங்கையால் தடுத்து பாதியிலேயே நிறுத்தினாள்.

அறையை விட்டு வெளியே வந்தாள். தலையைக் கையால் கோதினபடியே நிமிர- திறந்திருந்த பாதி கதவு வழியே- விஸ்வத் தெரிந்தான்.

ராத்திரி ரஃப் ஸ்கெட்சாய்ப் போட்டிருந்த சூரிய அஸ்தமனத்துக்கு பிரஷ் வழியே நிறம் வார்த்துக் கொண்டிருந்தான். பக்கத்து மேஜையின் வர்ண பேஸ்ட்கள், பாட்டில்கள் குழைக்கிறட்ரே, வித வித சைஸ்களில் பிரஷ்கள், சின்ன பிறாஸ்டிக் கிண்ணத்தில் தண்ணீர் என்று பலதும் இறைந்து கிடந்தது.

"குட்மார்னிங் அண்ணா."

ஆர்த்தியின் குரல் காதில் விழ-

பிரஷ் தீற்றலை நிறுத்தி விட்டுத் திரும்பினான்.

அகலமாய் புன்னகைத்தான்.

"குட்மார்னிங் ஆர்த்தி..."

"ராத்திரி தூங்கினியா... இல்லையாண்ணா?

"ஒரு ஆர்ட் ஆரம்பிச்சேன்னா அதைக் கம்ப்ளீட் பண்ற வரைக்கும் எனக்கு தூக்கமே வராது. ரெண்டு மணி வரைக்கும் ஆர்ட் பண்ணினேன்... அப்புறம் தூங்கி அஞ்சு மணிக்கு எந்திரிச் சுட்டேன்..."



"என்னை எழுப்பி விட்டிருந்தேன்னா...டீ போட்டு கொடுத்திருப்பேனே..."

"நல்லா தூங்கிட்டிருந்தே... டிஸ்டர்ப் பண்ண மனசில்லை..."

"பின்னே எதுக்காக நான் கூட வந்தேனாம்?"

சொல்லிவிட்டு பாத்ரூமைப் பார்த்து நடந்தாள்.

பத்து நிமிஷங்கள் செலவழித்து பல்தேய்த்து முகம் கழுவினாள். இன்னொரு பத்து நிமிஷங்கள் டீ ப்ரிபேர் செய்வதில் செலவழித்தாள். ஏந்திய டீ டம்ளர்களோடு விஸ்வத் வரைந்து கொண்டிருந்த அறைக்கு வந்தாள். மேஜையில் அவனுக்குப் பக்கத்தில் வைத்தாள்.

"எடுத்துக்கோண்ணா."

"ம்..."

சாத்தியிருந்த ஜன்னலை நோக்கிப் போனாள்.

"ஜன்னலை எதுக்காக சாத்தி வெச்சிருக்கே?"

சொல்லியபடியே ஜன்னல் கொக்கிகளை விலக்கினாள்.

"காலை குளிர் அதிகமா இருந்தது ஆர்த்தி. அதான் சாத்தி வைச்சிருந்தேன்..."

ஜன்னல் கதவை தள்ளி, கொக்கியை மாட்டினாள். கர்ட்டனை இழுத்து விட்டாள், வெளியே காலை நேர விடியலின் அரங் கேற்றம்.

தூரத்து கடல் க்ரே நிறத்தில் அசைய-பறவைகள் தாழ்வாய் பறந்தன. அதைப் பார்த்துக் கொண்டே நின்றவள்-கடற்கரை மணலுக்கு பார்வையை மாற்றினபோது-

நெஞ்சப் பரப்பில் தத்டென்று அதிர்ந்தாள்.

மணல்ப் பரப்பில்... பார்வையைப் போட்டுக் கொண்டே-

"அண்ணா... இங்கே வா..."

பதட்டமாய் விஸ்வத்தைக் கூப்பிட்டாள் ஆர்த்தி.

விஸ்வத் நிமிர்ந்தான்.

"என்ன ஆர்த்தி...?"

"சீக்கிரமா இங்கே வந்து பாரு..."

ஆர்த்தியின் முகம் பதட்டத்தை உணர்ந்த வனாய் - ப்ரஷ்ஷை எறிந்துவிட்டு- நான்கே எட்டில்-

ஆர்த்தி நின்றிருந்த ஜன்னலருகே வந்தான்.

"என்ன ஆர்த்தி...?"

ஆர்த்தி தன் நீள விரலை கரை மணலை நோக்கி சுட்டிக் காட்டினாள்.

"அ...அங்க பாருண்ணா..."

விஸ்வத் பார்வையை அவள் காட்டின பக்கம் போட -

அவனும் நெஞ்சுக்குள் அதிரல் வாங்கி முகம் மாறினான்.

அணிந்திருந்த வெள்ளை சர்ட் அங்கங்கே திட்டுத் திட்டாய் ரத்தப்பட்டிருக்க-

யாரோ ஒருத்தன் எழுவதும், முடியாமல் கீழே சரிவதுமாய் நெஞ்சைப் பிடித்துக் கொண்டு கரை மணலின் மேல் மரணப் போராட்டம் நிகழ்த்துவது தெரிந்தது.

"ஆர்த்தி சீக்கிரம் வா... அது யார்ன்னு பார்க்கலாம்...?"

வெளிக்கதவைப் பார்த்து ஓடினான் விஸ்வத். பின்னாலேயே பரபரத்து ஓடினாள் ஆர்த்தி.

காம்பௌண்ட் கேட்டை நீச் செனச் சத்தம் வர-முழுசாய் திறந்து கொண்டு வெளியே பாய்ந்தார்கள். மணல் மேல் பயம் கலந்த ஓட்டம் நிகழ்த்தினார்கள், ஆர்த்திக்கு மூச்சு வாங்கியது.

ஒரு நிமிஷ ஓட்டத்தில் அவனை அடைந்தார்கள்.

சர்ட் முழுக்க ரத்தமும், மணலும் கலந்து அப்பிக் கிடந்தது. முப்பத்தைந்து நாற்பது வயதில் தெரிந்தான். க்ரே பேண்ட்டுக்குள் வெள்ளை சர்ட்டை இன் செய்திருந்தான். சொருகிக் கொண்டு இமைக்கு ஏறின கண்களை இவர்கள் இரண்டு பேரையும் பார்த்ததும்-

பிரயத்தனப்பட்டு மலர்த்தினான்.

என்னவோ பேச முயன்றான் - முடியாமல்-

தள்ளாடியபடியே நடுங்குகற கைகளை உயர்த்தி அந்த திசையைக் காட்ட-

அவன் காட்டின திசையில்-

அவர்கள் பார்த்த நிமிஷம் உடம்பு உதறி இக்னீஷியன் சிஸ்டம் உயிர் பிடித்துக் கொண் டிருந்தது.

ஆர்த்தி சுத்தலான குரலில் அலறினாள்.

"அண்ணா... அந்த கார் நெம்பரை நோட்

பண்ணு... அவங்க தான் இவரை எதாவது பண்ணியிருக்கணும்..."

கைதடுமாற பாக்கெட் பேனாவை எடுத்தான் விஸ்வத்.

நகர்ந்து போகிற காரின் நம்பர் அந்த வைகறை வெளிச்சத்தில் கொஞ்சம் சிரமமாய் தெரிந்தாலும்-அதை உன்னிப் பாய் பாய்த்து-அடையாளம் கண்டு கொண்டான் விஸ்வத்.

பரபரவென உள்ளங்கையில் எண்ணை எழுதிக் கொண்டான் விஸ்வத்.

அதே விநாடி-ரத்தப்பட்டிருந்த அந்த ஆசாமி மல்லாந்து ஒரு நீளமான மயக்கத்துக்கு போயிருந்தான்.

ஆர்த்தி பதட்டம் நிரம்பிய குரலில் சொன்னாள்.

"அண்ணா இவரை நம்ம பங்களாவுக்கு கொண்டு போயிடலாம்... முதலலுதவிப் பெட்டிதான் நம்மகிட்டே இருக்கே... ட்ரீட் மெண்ம் எடுத்துட்டு டாக்டர் கிட்டே கொண்டு போயிடலாம்..."விஸ்வத் தலையசைத்தான்.

"நீ கால் பக்கம் பிடி ஆர்த்தி. நான் தலையைப் பிடிக்கறேன்..."

பரபரவென இயங்கினாகள்.

மூச்சு வாங்க அவனைத் தூக்கிக் கொண்டு மணலில் நடந்தார்கள்.

"அண்ணா பிஸ்டலால சுட்டிருக்காங்க..."

அவசர அவசரமாய் பங்களாவைத் தொட்டு போர்டி கோவுக்குள் நுழைந்து -

ஹால் சோபாவில் அவனைக் கிடத்தினார்கள்.



"ப்ளட் வெளியேறாமே காயத்துல கையை வெச்சு பொத்திக் கோண்ணா. ஃபர்ஸ்ட் எய்ட் பாக்ஸ் எடுத்துட்டு வந்திடறேன்..."

அவசர அவசரமாய் உள்ளே போனாள் ஆர்த்தி.

போன வேகத்திலேயே மெடிக்கல் கிட்டோடு திரும்பி வந்தாள்.

பரபரப்பாய்ப் பிரித்து-சில ஆயுத்தங்களைச் செய்வதற்குள்-

ரத்தப்பட்டிருந்த ஆசாமி ஒரு முறை விலுக்கென்று உதறிக் கொண்டான்.

அந்த உதறலில் எல்லா அவயங்களும் நடுங்க-

பிறகு வந்த விநாடிகளில் நிசப்தமானான்.

அவசர அவசரமாய் அவனுடைய நாசியில் கைவைத்த ஆர்த்தி ஹக்கென்று நிமிர்ந்தாள்.

"முடிஞ்சது அண்ணா."

அதிர்ச்சியாய் ஆர்த்தியைப் பார்த்த விஸ்வத்தின் கண்களில் திகில்.

ஆர்த்தி கேட்டாள்.

"இப்ப என்னண்ணா பண்றது...?"

"போலீஸ்க்கு இன்பார்ம் பண்ணிடலாம்..."

ஹாலின் சுவரோராமாய் இருந்த டெலி போனை நோக்கி போனான் விஸ்வத்.

ஆர்த்தி மறித்தாள்.

"அண்ணா இது மர்டர்... போலீஸ் நம்மையே சந்தேகப்படு வாங்க...?"

"அதுக்காக இன்பார்ம் பண்ணாமே இருக்க முடியுமா ஆர்த்தி நடந்ததை நடந்தமாதிரி

சொல்லிடலாம்... கார் நெம்பரை நோட் பண்ணியிருக்கோம்..."

சொல்லிவிட்டு நடுங்குகிற விரல்களால் எண் 100ஐ டயலில் சுழற்ற ஆரம்பித்தான் விஸ்வத்.

அதே விநாடி-

'ர்ர்ர்ர்ர்ர்ர்ர்'

வாசலில் கார் சப்தம் கேட்க-

ஜன்னல் வழியே எட்டிப் பார்த்தாள் ஆர்த்தி.

பார்த்ததுமே-

ஏகப்பட்ட வோல்டேஜில் ஷாக் வாங்கின மாதிரி அதிர்ந்து போனாள்.

சிறிது நேரத்திற்கு முன்னால் நம்பர் குறித்த அந்த மெரூன் நிற அம்பாஸ்டர் கார் ஒரு கோபச் சீறலோடு வந்து போர்டி கோவை நிறைத்து நின்றது.

## 3

முதுகுத் தண்டில் அதிர்ச்சி நிரம்பி-முகம் வெளுத்து-

"அண்ணா..." என்று ஆர்த்தி கத்த வாயெடுத்த விநாடி-

படீரென்று-கார்க் கதவுகளைத் திறந்துக் கொண்டு படிகளில் பூட்ஸ் கால்களால் தடதடத்து அந்த ரெண்டு பேர் ஹாலுக்குள் பிரவேசித்தார்கள்.

இரண்டு பேர்க்குமே உடம்பில் திடகாத்திரம் இருந்தது. நாங்கள் போலீஸுக்கு பிடிக்காத வர்கள் என்கிற வாசகம் அவர்களுடைய



முகங்களை படிக்கிறபோது தெரிந்தது. கண் களை உறுத்துகிற வர்ணத்தில் பனியன்கள் அணிந்து - ஸ்டோன்லாஷ் பேண்ட்களில் பிதுங்கி தெரிந்தார்கள். ஒருத்தன் கையில் பிஸ்டல் சனியன் தெரிந்தது.

விஸ்வத்தின் டெலிபோன் முயற்சியை உணர்ந்த ஒருத்தன் பாய்ச்சலாய் டெலி போனைத் தொட்டு இரண்டு கையாலும் ஒயரைப் பற்றி- த்தட்டென்று இழுக்க - டெலிபோன் கீழே விழுந்து - மண்டையை உடைத்துக் கொண்டது.

கோபமான விஸ்வத்-

"யார்ரா நீங்க..."

என்றபடி பாய இரண்டு பேருமாய் சேர்ந்து வெகு சுலபமாய் மடக்கிப் பிடித்தார்கள்.

ஆர்த்தி ஓடி வந்தாள்,

"அண்ணா"

திமிறிய விஸ்வத்தைப் பார்த்துப் புன்னகைத் தான் அ[illegible] ஒருவன்.

"இதோ பார்... உங்க ரெண்டு பேர் மேலயும் எங்களுக்கு எந்த விதமான பகையோ, விரோதமோ கிடையாது... நீங்களாக இப்போ எங்க விஷயத்தில் குறுக்கிட்டிருக்கீங்க... இங்கே செத்துப் போயிருக்கிற மூர்த்தி எங்க ளோட பார்ட்னர்தான். நாங்க மூணுபேருமே போலீஸுக்கு பிடிக்காத வேலைகளை செஞ்சிட்டிருந்தவங்க... ரெண்டு மூணு நாளா இவன் சரியில்லை... திருந்திட் டேன்னு சொல்லி எங்களை காட்டிக் குடுக்கப் பார்த்தான்... ஸோ வேற வழியில்லாம இவனை தீர்க்க வேண்டிய தாயிருச்சு..."

அடுத்தவன் குறுக்கிட்டுப் பேசினான், ஆர்த்தியைக் காட்டிக் கேட்டான்.

"பிரதர்! பாப்பா யாரு உன் ஜோடியா?"

"ஸிஸ்டர்" என்றான் விஸ்வத்.

"ஓ...ஸாரி...உனக்கு ஸிஸ்டராயிருந்தாலும் வேற மாதிரி உறவானாலும் எங்க பார்வைச்கு அவ நல்லாத்தான் இருக்கா... டேய் வீர்சிங்-ஸாரை விசாரி...?"

வீர்சிங் என்று அழைக்கப்பட்டவன்- விஸ்வத்தை நெருங்கி தன் கையிலிருந்த பிஸ்டலால் அவன் முகத்தை வருடினான்.

"யாருக்கு ஸார் போன் பண்ணினே? போலீஸுக்கா?"

"........." விஸ்வத் மௌனம் காட்டினான்.

"எங்க கார் நெம்பரை வேற உள்ளங்களையில எழுதி வெச்சிருக்கே போலிருக்கு... அழிச்சிடு ஸார்..."

விஸ்வத் முறைத்தான்.

"என்ன ஸார் முறைப்பு காட்றே? நானும் என்னோட சகாவும் அநாவசியமா யாரையும் கொல்ல மாட்டோம்... எங்க வழியில குறுக்கிட்டா முடிக்கவும் தயங்கமாட்டோம்... நாங்க சாயந்திரம் ஆறுமணி வரைக்கும் இதே வீட்லதான் இருக்கப் போறோம்..."

என்ற வீர்சிங் இன்னொருத்தனிடம் திரும்பினான், கேட்டான்.

"ஜெயபால் நமக்கு ஃப்ளைட் எத்தனை மணிக்கு?"

அந்த ஜெயபால் ஆர்த்தியை சுவாரசிமாய் பார்த்துக் கொண்டே-



"ஏழு மணிக்கு" என்றான்.

வீர்சிங் சிரித்தான்.

"சாயந்தரம் ஆறு மணி வரைக்கும் நமக்கு பாதுகாப்பான பங்களா... இதுதான் ஜெயபால். மூர்த்தியை கடற்கரையோரமா அடக்கம் பண்ணிட்டு மத்தியானம் இங்கேயே சாப்பிட்டு - பாப்பாவையும்- டி.வி. யையும் சாயந்தரம் ஆறு மணி வரைக்கும் பார்த்துட்டிருந்துட்டு அப்புறமா-இவங்களை உள்ளே வெச்சு பூட்டிட்டு நாம ஏர்போர்ட் போயிடலாம்..."

வீர்சிங் தன் கையிலிருந்த பிஸ்டலை சுழற்றிக் கொண்டே கேட்டான்.

"உன் பேர் என்ன?"

"விஸ்வத்."

"பாப்பா பேரு...?"

"ஆர்த்தி."

"இந்த பங்களால நீங்க ரெண்டு பேர் மட்டுந்தான் இருக்கீங்களா?"

"ம்."

"வேலைக்காரங்க?"

"ஒருத்தருமில்லே..."

"சமையெல்லாம் பாப்பா பண்ணிடுவா?"

"ம்."

"பாவம்!"

என்று சொன்னபடி ஆர்த்தியிடம் திரும்பினவன் சொன்னான்

"பாப்பா... உன் கையாலே எங்களுக்கு டீ போட்டுட்டு வர்றியா?"

ஆர்த்தி விஸ்வத்தை பார்த்தாள்.

வீர்சிங் புன்னகைத்தான்.

"போ... பாப்பா... அண்ணன் ஒண்ணும் சொல்ல மாட்டார். எங்ககூட உன்னை விளையாடவா கூப்பிட்டோம்...: டீதானே போட்டுட்டு வரச் சொன்னோம்."

விஸ்வத் இறுகின முகத்தோடு தலையசைத்தான்.

ஆர்த்தி சமையல் அறையைப் பார்த்து நடக்க ஆரம்பித்தாள். மனசு தீவிரமாய் யோசித்தது.

அறைக்குள் இருக்கிற காம்போஸ் டேப்ளட்ஸ் எதையாவது கலக்கிற டீயில் போட்டு அந்த ரெண்டு பேருக்கும் கொடுத்து விடலாமா...? - அவள் யோசிக்க யோசிக்க -

"பாப்பா..."

வீர்சிங்கின் குரலால் நின்றாள்.

திரும்பினாள்.

"உனக்கும் வார்ன் பண்றேன்... எங்களுக்கு ஏதாவது கெடுதல் பண்ண நீ நினைச்ச நிமிஷம் உங்க அண்ணன் உயிரோட இருக்க மாட்டான்..."

அவன் சொன்னது ஆர்த்திக்கு 'திகீர்' றென்றது. காம்போஸ் டோஸ் எண்ணத்தை உதறினாள்.

"ஜெயபால் இளித்துக் கொண்டே தன் எருமைத்தனமான உடம்பைத் தூக்கிக் கொண்டு அவளைப் பின் தொடர்ந்தான்.

அவன் இளிக்கும், பார்வைக்கும் டீ போடுகிற நிமிஷங்களில் நெஞ்சுக்குள் தடதடத்தாள்



ஆர்த்தி. பத்து நிமிஷங்களில் இரண்டு டம்ளர்களில் டீ தயாரித்தாள்.

ஒரு டம்ளரை அவனிடம் நீட்ட -

பிஸ்டலை இடது கைக்கு மாற்றிக் கொண்டு - வாங்கிக் கொண்டான்.

"தேங்க்ஸ் ஆர்த்தி."

ஆர்த்தி விடுவிடுவென்று ஹாலுக்கு வந்தாள். வீர்சிங்கிடம் ஒரு டம்ளரை நீட்டி- அவன் வாங்கிக் கொண்ட பிறகு-விஸ்வத்தின் பக்கமாய் வந்து நின்று கொண்டாள்.

"ஜெயபால்..." கூப்பிட்டான் வீர்சிங்.

டீ டம்ளரை நிமிஷத்தில் காலி செய்திருந்தான.

"சொல்லு வீர்சிங்..."

"காருக்குள்ள இருக்கற நம்ம காமிராவை எடுத்துட்டு வா..."

"எதுக்கு?"

"கொண்டு வா சொல்றேன்..."

ஜெயபால் நகர்ந்தான். உதட்டைக் குவித்து சன்னமாய் விசிலடித்து இரண்டு பேரையும் பார்த்துப் புன்னகைத்தபடி வீட்டைச் சுற்றிலும் பார்வையைப் போட்டான்.

"வீடு அம்சமாத்தான் இருக்கு..."

இரண்டே நிமிஷங்களில் ஜெயபால் அந்த யாஷிகா காமிராவுடன் திரும்பி வந்தான். உயர்ந்த ஜாதி காமிரா. அதன் நெற்றியில் தாயகம் ஜப்பான் என்று பொறித்திருந்தது.

"காமிரா எதுக்கு வீர்சிங்?"

"அண்ணனையும் தங்கச்சியையும் போட்டோ எடுக்கத் தான்."

சிரிப்போடு சொன்ன வீர்சிங் விஸ்வத்தையும் ஆர்த்தியையும் பார்த்தான்.

"விஸ்வத்... நீயும் பாப்பாவும் முரண்டு பிடிக்காமே நான் சொன்னபடி கேக்கணும்... அடாவடித்தனம் பண்ணினா பாப்பாவுக்கு கற்பு 'லாஸ்' ஆயிடும்."

விஸ்வத் திடுக்கிடலோடு பார்க்க-

தொடர்ந்தான் வீர்சிங்.

"மொதல்ல நீயும் பாப்பாவும் மூர்த்தியோட டெட்பாடி கிட்டே வாங்க..."

கண்களில் பயம் தொத்த தயக்கமாய் நின்றார்கள்.

"ம்... வாங்க..."

அவன் கையில் ஆடின பிஸ்டலுக்கு கட்டுபட்டு இருவரும் வந்தார்கள்.

"ரெண்டு பேருமா சேர்ந்து பாடியை சோபாவிலிருந்து கீழே இறக்கி வையுங்க..."

ஆளுக்கொரு பக்கமாக் பிடித்து இறக்க ஆரம்பித்தார்கள். பாதி இறக்கிக் கொண்டிருந்த போது வீர்சிங் சொன்னான்.

"ஜெயபால் காமிரா லென்ஸில் கண்ணைப் பதித்து - பட்டனைத்தட்ட காமிரா அந்த ஸீனை விழுங்கியது."

"க்ளிக்!"

"மூர்த்தியை அப்படியே வாசலுக்கு கொண்டு போங்க."

ஏராளமான வியர்வையோடு கொண்டு போனார்கள்.



"ஜெயபால்"

"க்ளிக்!"

போர்டிகோவைக் கடக்கிறபோது-

க்ளிக்!

மணலில் இழுத்துப் போகிறபோது-

க்ளிக்!

சவுக்குத் தோப்புக்குள் பிரவேசித்தபோது-

டெட் பாடியைப் பக்கத்தில் போட்டுக் கொண்டு தரையில் குழி தோண்டியபோது-

பிணத்தை உள்ளே இறக்கின போது-

மண்ணை சரித்து மூடின போது-

தரையைப் பழையபடி மட்டமாக்கின போது-

எல்லாமே படிபடியாய் 'க்ளிக்' கப்பட்டது.

திரும்பி நடக்க ஆரம்பித்தார்கள்.

"ப்ரதர்... நாங்க சாயந்தரமா ஃப்ளைட்டுக்குப் போனதுக்கப்புறம் நீங்க இது சம்பந்தமா போலீஸ் பக்கம் போகாம இருக்கணும்கறதுக்காக இந்த ஏற்பாடு... அப்படி ஏதாவது நீங்க எங்களை சிக்க வைக்க முயற்சி பண்ணினா இந்த ப்லீம் ரோல் போலீஸ் கைக்குப் போகும்... நம்ம ஊர் போலீஸைப் பத்தித் தான் உனக்குத் தெரியுமே... மாட்டினவனை தூக்குக்கு அனுப்பாமே விடமாட்டாங்க..."

காம்பௌண்ட் கதவை ஜெயபால் திறந்து கொண்டிருக்க - அதிர்ந்து போய் நடந்து கொண்டிருந்த விஸ்வத், ஆர்த்தியோடு வீர்சிங் இணைந்து நடந்து வந்தான். வீர்சிங் எதற்கோ திரும்ப -

அந்த விநாடியின் கால் பாகத்தை உபயோகப்படுத்திக் கொண்ட விஸ்வத் குப்பென்று பாய்ந்தான்.

தடாலென ஜெயபாலின் காலை இடறி காமிராவைத் தட்டி விட்டான். பிஸ்டல் காமிரா இரண்டுமே- காற்றில் நீச்சலடித்து தள்ளிப் போய் விழ - காமிராவை மட்டும் அள்ளிக் கொண்ட விஸ்வத்-

ஆர்த்தியை இழுத்துக் கொண்டு எதிர் திசையில் ஓடினான்.

"ஆர்த்தி....ஓடி வா... நிக்காதே!"

மணலில் தப்தப்பென இரண்டு பேரும்ஓட ஆரம்பித்தார்கள்.

## 4

ஆர்த்தியும், விஸ்வத்தும் ஓடத் தொடங்கின முப்பதாவது விநாடி-

ஜெயபாலும், வீர்சிங்கும் சுதாரித்துக் கொண்டார்கள். இயல்புக்கு வந்தார்கள். தள்ளிக் கிடந்த பிஸ்டலை பொறுக்கிக் கொண்டார்கள்.

"வீர்சிங்... துரத்து..."

இரண்டு பேரும் முன்னால் ஓடிக் கொண்டிருந்த அவர்களைத் துரத்த ஆரம்பித்தார்கள்.

ஆர்த்தியை இழுத்துக் கொண்டு ஓடுவது விஸ்வத்துக்கு கஷ்டமாயிருந்தது. எட்டு மணிக்கே சூரியன் மணலை சூடு பண்ணியிருக்க-அதில் கால் பதித்து ஓடினார்கள்.

ஆர்த்தி நிறைய மூச்சு வாங்கினாள்.



அடிக்கடி திரும்பிப் பார்த்து சோர்ந்து போனான்.

"அண்ணா... ஓட முடியலை..."

விஸ்வத்தின் ஓட்டத்துக்கு ஈடுகட்ட முடியாமல் பின் தங்க

அழுத்தமாய் பிடித்திருந்த விஸ்வத்தின் கை முன்னால் இழுக்க-

பாலன்ஸ் கெட்டுப் போய் மணலில் தடுக்கி விழுந்து உருண்டாள்.

விழுந்திருந்த ஆர்த்தியின் தோளைப் பிடித்து தூக்கி நிறுத்துவதற்குள்-

வீர்சிங்கும், ஜெயபாலும் கணிசமான இடைவெளியை மறைத்து வந்திருந்தார்க. கையிலிருந்த பிஸ்டலை வீர்சிங் உயர்த்தினான்.

ஆர்த்தி எழுந்து நிற்க... உதவிக் கொண்டிருந்த-விஸ்வத்தைக் குறி பார்த்தான். சரியாய் பத்து விநாடி குறி பார்த்தான். பிறகு ட்ரிக்கரை சுண்டினான்.

'ஷ்ஷ்க்க்க்...'

தோட்டா சீறிக் கொண்டு காற்றைக் கிழித்து-விஸ்வத்தின் நெஞ்சைத் தேடி சரன் அடைந்தது விஸ்வத் சத்தம் காட்டாமல் முன் பக்கமாய் மடங்கி... விழுந்து... கடற்கரை மணலுக்கு ரத்தத்தை வார்த்தான்.

ஆர்த்தி வீறிட்டாள்.

"அண்ணா...ஆ...ஆ...ஆ..."

ஆர்த்தி கத்தின விநாடி... துடித்துக் கொண்டிருந்த-விஸ்வத் மெல்ல அடங்கிக் கொண்டிருந்தான்.

'தட்...தட்...தட்...'

அவர்கள் ரெண்டு பேரும் ஓடி பக்கத்தில் வந்தார்கள்.

ஆர்த்தி விஸ்வத்தின் மேல் விழுந்த புரண்டு அழுது கொண்டிருக்க...

வீர்சிங் மெல்லச் சொன்னான்.

"எங்களுக்கெல்லாம் இரக்கம் கிடையாது பாப்பா... நாங்க அவ்வளவு தூரம் சொல்லி யிருந்தும் உன்னோட அண்ணன் ஹீரோத் தனம் பண்ண நினைச்சான். இப்போ பீச் மண்ணுக்கு ரத்தத்தை குடுத்துட்டிருக்கான் நீயாவது சாயந்தரம் ஆறு மணி வரைக்கும் கொஞ்சம் புத்திசாலித்தனமா நடந்துக்கோ...

சொல்லிவிட்டு-

விஸ்வத்தின் கையிலிருந்த காமிராவை எடுத்துக் கொண்டான் வீர்சிங்.

ஜெயபால் விஸ்வத்தின் காலைப் பிடித்து தரதரவென மணலில் இழுத்துப் போனான் கடலோரக் காற்றோசையைத் தவிர அந்த பிராந்தியத்தில் கண்ணுக்கு எட்டிய தூரத்துக்கு ஒரு ஜீவராசியும் இல்லை. நேரே அந்த சவுக்குத் தோப்புக்கே மறுபடியும் போனார்கள்.

மூர்த்தியைப் புதைத்த இடத்துக்கு பக்கத்தில் இன்னொரு குழி ஆழமாய் வெட்டி னார்கள்.

விஸ்வத்தை அதில் தள்ளி-மணலை சரித்து விட்டு...அழும் ஆர்த்தியை இழுத்து கொண்டு-திரும்ப பங்களாவுக்குள் வந்தார்கள்.

மூர்த்தியின் ரத்த சேதம் ஹாலின் சில பிரதேசங்களில் தெரி-ஜெயபால் ஆர்த்தியை ஏறிட்டான்.



"இதோ பார்... ஆர்த்தி... உன் அண்ணனோட முடிவு உனக்கும் வராமே இருக்கணும்ன்னா நாங்க சொன்னபடி கேக்கணும்... இதோ பார்... ஒரு பக்கெட்ல தண்ணி எடுத்துக்க... வேஸ்ட் துணியை தண்ணியில் நனைச்சு... இந்த ரத்தகறையெல்லாம் சுத்தமா துடை..."

அழுது கொண்டிருந்த ஆர்த்தி நகராமல் நிற்க- வீர்சிங் அவளை நெருங்கினான்.

"இதோ பார் பாப்பா... ஜெயபால் சொன்ன படி நீ கேக்கணும்... இல்லேன்னா அவனுக்கு கோபம் வந்துடும்... அப்புறம் உன்னோட உடம்புல துணியே இருக்காதபடி பார்த்துக்குவான்..."

ஆர்த்தி திகிலானாள்.

ஒரு பக்கெட் தண்ணீரையும் - வேஸ்ட் துணியையும் எடுத்து வந்து மூர்த்தியின் ரத்தம்பட்ட இடங்களை சுத்தம் செய்ய ஆரம்பித்தாள்.

மனசு பூராவும் பயக்குரல்.

விஸ்வத்தின் மரணம் அவளை அறுத்தது.

அண்ணா! அப்பா அம்மா உன்னோட இழப்பை எப்படி தாங்கிக் கொள்ளப் போகிறார் கள்!

கண்களில் நீர் சுறுசுறுவென்று சுரந்தது.

இந்த பங்களாவில் தன்னந்தனியாய் நான் மட்டும்... இருதயமே இல்லாத இந்த இரண்டு பேரையும் நான் எப்படி சமாளிக்கப் போகிறேன்?

ரத்தத்தை சுத்தம் செய்து கொண்டே-சுவர் கடிகாரத்தை நிமிர்ந்து பார்த்தாள் ஆர்த்தி.

மணி பத்து பத்து.

இந்த நரகத்தில் - இன்னும் எட்டு மணி நேரங்களுக்கு மேல் இருக்க வேண்டும். எந்த நிமிஷம் இவர்களின் புத்தி எப்படி மாறும் என்று சொல்ல முடியாது.

எந்த விபரீத நிகழ்வுக்கும் முன்பாக நான் தப்பிக்க வேண்டும்.

எப்படி...?

எப்படி...?

யோசித்த ஆர்த்தி சட்டென மனசுக்குள் பிரகாசமானாள். சங்கீத்!

சங்கீத் ஞாபகத்தில் உறைந்தான். தான் கடற்கரை பங்களாவுக்கு வரும் நாட்களில் பதினொரு மணிக்கு ஆர்த்தியைப் பார்க்க இங்கே வருவான். கடந்த ஒரு வருஷமாய் இருவரும் ஒருத்தரை யொருத்தர் விரும்பு கிறார்கள் க்ரௌன் ஃபேஸ்ட்னர்ஸில் சர்வீஸ் என்ஜினியர் - பதினொரு மணிக்கு - தவறாமல் வருகிற சங்கீத்...

இன்றைக்கு வருவானா...?

## 5

அழுது அழுது சிவந்து போன கண் களோடு - திகில் அடிக்கிற மனசோடு முழங் காலைக் கட்டிக் கொண்டு சுவரோரமாய் உட்கார்ந்திருந்தாள் ஆர்த்தி. சோபாவில் சாய்ந்து படுத்து சிகரெட் ஒன்றை உறிஞ்சிக் கொண்டருந்த வீர்சிங் கூப்பிட்டான்.

"பாப்பா..."

ஆர்த்தி நிமிர்ந்தாள்.



"உன் அண்ணனும் நீயும் மட்டுந்தான் இந்த பங்களாவுக்கு வந்நீங்களா?"

"ம்."

"அம்மா, அப்பா...?"

பதில் சொல்லப் பிடிக்காமல் மௌனம் சாதித்தாள் ஆர்த்தி வீர்சிங் சொன்னான்.

"கேட்ட கேள்விக்கு பதில் சொல்லாமே போனா ஜெயபாலை உன் பக்கத்துல வந்து உட்காரச் சொல்லுவேன். அப்புறம் அவன் சும்மா இருக்கமாட்டான்..."

விருட்டென்று நிமிர்ந்தாள் ஆர்த்தி.

"கே... கேளு... சொல்றேன்..."

"அப்பா....அம்மா...?"

"மெட்ராஸ் பங்களாவில் இருக்காங்க..."

"அவங்க இங்கே வரமாட்டாங்களா...?"

"யாரு...?"

பேச பேச அழுகை வெடித்தது ஆர்த்திக்கு.

"அம்மாவும், அப்பாவும்...?"

"வருவாங்க."

"தினமும் வருவாங்களா?"

"ம்ஹூம். சொல்ல முடியாது. திடீர்னு வருவாங்க... அரை மணி நேரம் இருந்துட்டு போயிடுவாங்க..."

"வேற யார் யாரெல்லாம் இங்கே வரு வாங்க...?"

ஆர்த்தி தயங்கி விட்டுச் சொன்னாள்.

"சங்கீத் வருவார்...?"

"சங்கீத் யாரு?"

"என்னை கல்யாணம் பண்ணிக்க போறவர்..."

"சங்கீத் எத்தனை மணிக்கு வருவான்?"

"காலைல பதினொரு மணி சுமாருக்கு..."

"வந்தா... ரொம்ப நேரம் இருப்பானா?"

"பேசிட்டிருப்பார்... செஸ் விளையாடுவார்..."

"வேறு யாராவது...?"

ஒரு நிமிஷ யோசிப்புக்குப் பின் -

மறுத்தலாய் தலையசைத்தாள்.

"வேற யாரும்... வரமாட்டாங்க..."

வீர்சிங் ஜெயபாலிடம் திரும்பினான்.

"ஜெயபால்..."

"ம்."

"நீ ஒண்ணு பண்ண... அந்தப் பக்கம் மொட்டமாடி இருக்கு... ஏறிப் போய் மொட்டை மாடில உட்கார்ந்துக்க... யாராவது வர்றது தெரிஞ்சா கீழே வந்து சொல்லு..."

"சரி."

ஜெயபால் விலகி -

அடுத்த அறையில் தெரிந்த படிகட்டை நோக்கிப் போனான். படிகளில் ஏறி மறைந்தான்.

"உன் அண்ணன் படம் வரைவானா?"

"ம்."

"நீ என்ன படிக்கிறியா?"

"ம்... மெடிக்கல் ஃபைனல் எக்ஸாம் எழுதியிருக்கேன்... ரிஸல்ட் வரணும்..."

"ஓ... பாப்பா... டாக்டரம்மாவா?"



சின்ன சிரிப்போடு வீர்சிங் கேட்டதும் எரிச்சல் பட்டாள் ஆர்த்தி. அதே விநாடி -

தடதடவெனப் படிக்கட்டில் இறங்கி வந்தான் ஜெயபால். உடம்பில் பதட்டம்!

"வீர்சிங்... பங்களாவைப் பார்த்து ஒரு பைக் வருது..."

ஜெயபால் சொன்னதும்-வீர்சிங் ஆர்த்தியை இழுத்துக் கொண்டு ஜன்னலருகே போனான்.

ஜன்னல் கர்ட்டனை ஒதுக்கிப் பார்க்க-

சவுக்கு மரங்களுக்கு மத்தியில்-தார் சாலையில் ராஜ்தூத்தில் ஆரோகணித்து வரும் சங்கீத் தெரிந்தான்.

"ஆர்த்தி வர்றது யாரு?"

"அவர்தான் சங்கீத்."

வீர்சிங்கும் ஜெயபாலும் முகம் சுளித்தார்கள். வீர்சிங் சொன்னான்.

"இதோ பார் பாப்பா... நாங்க ரெண்டு பேரும் பக்கத்து ரூம்ல இருப்போம்... ஜன்னல் வழியா பிஸ்டல் குறி பார்த்துட்டே இருக்கு... உன்னை அல்ல... வரப்போகி உன் சங்கீத்தை... நீ ஏதாவது இசகு பிசகா எங்களைக் காட்டித் தர்ற மாதிரி நடந்து கிட்டேன்னா... அப்புறம் நீ உன்னோட சங்கீத்தையும் இழக்க வேண்டி வரும்... உன் அண்ணனுக்கு பக்கத்திலேயே குழி தயார் பண்ணி அழகா புதைச்சிடலாம்... புரிஞ்சதா...?"

ஆர்த்தி பயமாகி - நெஞ்சம் தடதடத்தாள்.

காம்பௌண்டுக்குள் பைக் சத்தம் கேட்டது.

"ஆர்த்தி..."

நகர்ந்த வீர்சிங் மறுபடியும் கூப்பிட -

திரும்பினாள்.

"ம்?"

"சங்கீத்துக்கு டயம் ஒரு மணி நேரம்தான்... அதுக்கு மேல அவன் இங்கே இருக்கக் கூடாது... அதுக்கு ஏத்த மாதிரி பேசி அவனை சீக்கிரம் வெளியே அனுப்பப் பாரு... தெரிஞ்சதா...?"

"ம்."

"சொன்னதெல்லாம் ஞாபகம் இருக் கட்டும்..."

வெளியே பைக் ஸ்டாண்ட் இடப்படும் சத்தம் கேட்க-

வீர்சிங்கும், ஜெயபாலும்-அவசர அவசர மாய் பக்கத்து அறையில் ஓடி அடைக்கல மானார்கள். சாத்தின ஜன்னலில் இடைவெளி ஏற்படுத்திக் கொண்டு -

பிஸ்டலின் வாயை - தோட்டாவைத் துப்ப வசதியாய் வைத்துக் கொண்டான் வீர்சிங்.

## 6

ஆர்த்தியின் இருதயப் பறவை படபட வென அடித்துக் கொள்ள- வரபோகும் சங்கீத்துக்காக காத்திருந்தாள். வீர்சிங்கும், ஜெயபாலும் நுழைந்து கொண்ட அறையைப் பார்த்து வியர்த்தாள். ஜன்னல் இடுக்கில் சின்ன அசைவோடு ஹாலின் எந்த மூலை முடுக்குக்கும் தோட்டாவை வெளித்தள்ள தயாராய் காத்திருக்கிற பிஸ்டலின் கறுப்பு வாய் கண்ணில் பட்டது.



சங்கீத் மூலமாய் தான் தப்ப நினைத்த எண்ணத்தை சுத்தமாய் கை விட்டாள் ஆர்த்தி.

கண்ணெதிரே விஸ்வத்தை தோட்டாக் களால் துளைத்தெடுத்தது நினைவில் வந்து பயமுறுத்தியது.

வேண்டாம்!

சங்கீத்துக்கும் அதே நிலைமை வேண்டவே வேண்டாம்.

ஆர்த்தி யோசிக்க, யோசிக்க -

"ஹேய்...ஆர்த்தி...குட்மார்னிங்..."

சங்கீத்தின் உற்சாகம் மிளிர்கிற குரல்.

நிமிர்ந்தாள்.

புன்னகையோடு சங்கீத் வந்து கொண் டிருந்தான். முன் பக்கம் இருந்த ஐந்து பர்செண்ட் வழுக்கை கூட அவனுக்கு அழகாக இருந்தது புருவம், மீசை எல்லாமே அதிக அடர்த்தியில் - தெரிய பாலிஷ் போட்ட மாதிரி வழவழப்பில் மோவாய். சராசரி உயரம். அதிக வெயிட் போடாத உடம்பு. இளநீல ரேமான் பேண்ட்டையும், ஆஷ் நிற வாசகமில்லாத டீ ஷர்ட்டையும் உடம்புக்கு கொடுத்திருந்தான்.

"உக்காருங்க சங்கீத்..." - உள்ளே நடுக்கம் பிய்த்துக் கொண்டாலும் இயல்பாய் புன்ன கைத்து சுவரோர சோபாவைக் காட்டினாள்.

சங்கீத் அதில் உற்சாகமாய் நிரம்பினான். சொன்னான்.

"ஸாரி ஆர்த்தி..."

"எதுக்கு ஸாரி...?"

"ஹௌடு நேம் இட் கேஸட் வாங்கிட்டு வரச் சொன்னியே நேத்து... மறந்துட்டேன்..."

"பரவால்ல..."

சொன்ன ஆர்த்தி மறுபடி கேட்டாள்.

"என்ன சாப்பிடறீங்க சங்கீத்... காஃபி ஆர்...டி...?"

"ஏன் என்னாச்சு உனக்கு?"

கேட்டவனை திக்கெனப் பார்த்தாள்.

"ஏன்... சங்கீத்...?"

"நான் என்னிக்கு காஃபி டீ குடிச்சிருக் கேன்... எப்பவும் கூல்ட்ரிங்க்தான்னு உனக்கு தெரியாதா... இன்னிக்கு புதுசா கேக்கறே...?"

தடுமாறினாள் ஆர்த்தி.

"அ...ஸாரி சங்கீத்... ஏதோ ஞாபகத்தில்..." சொல்லிக் கொண்டே சங்கீத்துக்கு முதுகுக்குப் பின்புறமாய் இருந்த அந்த ஜன்னலைப் பார்த்தாள். துளியூண்டு தெரிந்த ஜன்னல் சந்து வழியே- பார்த்துக் கொண்டிருக்கும் பிஸ்டலின் ஒற்றை கறுப்புக் கண் தெரிந்தது. லேசாய் அசைந்தது.

சட்டென திரும்பினாள் ஆர்த்தி. முகத்தில் மலர்ச்சியை வர வழைத்துக் கொண்டு சொன்னாள்.

"ஒரு நிமிஷம் சங்கீத்... லெமன் ஜூஸ் கொண்டு வர்றேன்..."

சொல்லிவிட்டு சமையல் அறைக்கதவை நோக்கி நடக்க ஆரம்பித்தாள் ஆர்த்தி. சங்கீத் கூப்பிட்டான்.

"ஆர்த்தி ஒரு நிமிஷம்..."



நின்றாள்.

"என்ன சங்கீத்...?"

"எங்கே உன்னோட அண்ணனை காணோம்?"

"அ... அண்ணா...வா?" தடுமாறின ஆர்த்தி- சட்டென்று வாய்க்கு வந்த அந்த பொய்யைச் சொன்னாள்.

"ஆர்ட் பண்றதுக்காக சவுக்குத்தோப்பு பக்கமாபோனார்..."

"ஏதோ போட்டியில கலந்துக்கப் போறதா சொன்னாரே... அந்த போட்டி என்னிக்கும்?"

"அடுத்த மாசம்..."

சொல்லிவிட்டு நிற்காமல் உள்ளே போனாள் ஆர்த்தி. சங்கீத்திற்கு ஏதும் ஆபத்து வராமல் இருக்க வேண்டுமே என்று இதயம் பதறிக் கொள்ள ஆரம்பித்தன.

ஐந்து நிமிஷக் கழிப்பில் - கையில் ஏந்திய ஜூஸ் டம்ரோடு சமையலறையினின்றும் வெளிப்பட்டு சங்கீத்தை நெருங்கி டம்ளரை நீட்ட அவன் - வாங்கிக் கொண்டே கேட்டான்.

"உனக்கு... ஆர்த்தி...?"

"எனக்கு வேண்டாம்..."

"விடமாட்டேன்... இன்னொரு டம்ளர் கொண்டு வா..."

அவஸ்தையாய் உள்ளே போய் இன்னொரு டம்ளர் கொண்டு வந்தாள்.

சங்கீத் தன் கையில் இருந்ததை இரண்டாக்கி ஒரு டம்ளரை ஆர்த்தியிடம் நீட்டினான். விருப்பமில்லாமல் டம்ளரை உதட்டுக்குக்

கொடுத்தாள் ஆர்த்தி. சங்கீத் ஒரே மூச்சில் குடித்துவிட்டு சொன்னான்.

"செஸ் ஒரு ஆட்டம் ஆடலாமா... ஆர்த்தி?"

"வேண்டாம்... இன்னிக்கு செஸ் வேண்டாம்..."

"ஏன் வேண்டாங்கறே... உனக்குத்தான் செஸ் கேம் பிடிக்குமே... நானும் இன்னிக்கு நல்ல மூட்ல இருக்கேன்... உன்னோட அண்ணன் வர்றதுகுள்ளே இரண்டு கேம் ஆடிடலாம்..."

"வேண்டாம் சங்கீத்... இன்னிக்கு என்னோட மனசு சரியில்லை..."

"ஏன்?"

"தெரியலை..."

"உனக்கு என்னாச்சு ஆர்த்தி...எனி ப்ராப்ளம்...?"

மறுத்தலாய்த் தலையசைத்தாள் ஆர்த்தி.

"ஒரு ப்ராப்ளமுமில்லே... சங்கீத்..."

"ரிஸல்ட் வந்தாச்சா...?"

"நாளைக்கு."

"ரிஸல்டை நினைச்சு தான் கவலை படறியோ?"

சங்கீத்திடம் இதையே காரணமாய் சொல்லி நழுவிக் கொள்ளலாம்.

"ஆமா சங்கீத் ... ரிசல்ட்டை நினைச்சுதா கவலைப் படறேன்..."

"ஏன்?"

"எல்லா செமஸ்டர்லயும் ஃபர்ஸ்ட் கிளாஸ் பைனல்ல ஒரு எக்ஸாம் சரியா எழுதலை. அ



காலை வாரி விட்டுடுமோன்னு கவலையா இருக்கு..."

ஆர்த்தியைப் பார்த்தான் சங்கீத்.

"ஸோ வாட்? போனா போகுது... நல்லா படிச்சு சப்ளிமெண்ட்ரி எக்ஸாம் எழுதி பாஸ் பண்ணிடு..."

"பண்ணிடலாம்... அது ரிமார்க் ரிமார்க் தானே சங்கீத்..."

"டாக்டர் படிப்புல பெயிலாகி ஃபெயிலாகி படிச்சாத்தான் அனுபவம் அதிகமா வரும்... ரிசல்ட்டைப் பத்தி நீ ஏன் கவலைப் படறே...?"

ஆர்த்தியின் கண்கள் அடிக்கடி வாட்சைப் பார்த்துக் கொண்டன.

சங்கீத் வந்து அரைமணி நேரம் ஆயிற்று.

"சரி... ஆர்த்தி... எடுத்துட்டு வா செஸ் போர்டை. ஒரு கேம் ஆடினா ரிசல்ட் கவலை போயிடும்..."

ஆர்த்தி செயற்கையாய்ப் புன்னகைக்க முயன்றாள்.

"எனக்கு ஒரு கவலையுமில்லை... அதை மறக்கவும் அவசிய மில்லே... செஸ் வரவர போர் கேம் ஆயிட்டுது சங்கீத்..."

"உதைப்பேன். செஸ்கேம் போர்னு என் கிட்டே சொன்னா உதைப்பேன்..."

சுட்ட விரலை நீட்டியபடி - அவனை அடிப்பது போல் - பாவனை செய்து கொண்டு எழுந்தவன் - சோபா கம் பெட்டுக்கு கீழே தெரிந்த அந்த சிவப்புத் தீற்றலைப் பார்த்ததும் ஆர்த்தியிடம் நிமிர்ந்தான்.

"ஆர்த்தி..."

அவனின் அழைப்பில் இருந்த வித்தியாசத்தை உணர்ந்த வளாய் துணுக்குறலோடு அவனை ஏறிட்டாள் ஆர்த்தி. சங்கீத் தரையைப் பார்த்துக்கொண்டே சொன்னான்.

"சோபாவுக்கு கீழே என்ன சிவப்பாய்... ரத்தமா?"

ஆர்த்திக்கு நெஞ்சு தடக்தடக் என்றது.

"ரத்தமா?" என்று ஆச்சரியப்பட்டு கேட்ட ஆர்த்தி வேண்டுமென்றே குனிந்து பார்த்துவிட்டு புன்னகையோடு நிமிர்ந்தாள்.

"அண்ணன் பென்சில் சீவறப்போ பிளேடால கையைக் கீறி கிட்டார்... ரத்தம் ஏகமா கொட்டிப் போச்சி... நான்தான் கைக்கு கட்டு போட்டு விட்டேன்..."

"காயம் ரொம்ப ஆழமா ஆர்த்தி..."

"இல்ல... சின்னக் காயம்தான்... இங்கேதான் ஃபர்ஸ்ட் எயிட் பாக்ஸ் இருக்கே... மருந்து வச்சு கட்டியிருக்கேன்."

"உங்க அண்ணனைப் போய் பார்க்கலாமா? ஆர்த்தி..."

அதிர்வாய் நிமிர்ந்தாள்.

"வேண்டாம் சங்கீத்... அவர் காலையிலிருந்தே ரொம்பவும் டென்ஷனா இருந்தார்... எடுத்துட்டு கூட கிட்டே வராதேன்னு சொல்லியிருக்கார்... நான் கூப்பிடறப்போ வந்தா போதும் - சும்மா வந்து டிஸ்டர்ப் பண்ணாதேன்னு சொல்லியிருக்கார்..."

"ஆர்த்தி உங்கண்ணா எப்பவுமே ஷார்ப்னர்லதானே பென்சில் செதுக்குவார்...?"



"ஷார்ப்னரை காணோம்ன்னு இன்னிக்கு பிளேடில் சீவினார்! அதிருக்கட்டும். நீங்க எப்போ அந்த கேஸட் வாங்கிட்டு வர்றீங்க...?"

சங்கீத் புன்னகைத்தான்.

"அந்த கேஸட் உனக்கு கண்டிப்பா வேணுமா?"

"அ...ஆமா சங்கீத்... ஐலைக் தட் கேஸட்... சிரமத்தை பார்க்காமே எனக்கு வாங்கிக் கொடுங்களேன்..."

"நாளைக்கு வாங்கி வர்றேன்..."

"ஏன் இன்னிக்கே கிடைக்காதா?"

"அந்த கேஸட் மேலே உனக்கு அவ்வளவு கிரேஸியா...?"

"ம்."

"சரி சாயந்தரம் வர்றப்போ கொண்டு வர்றேன்..." என்று சொல்லிக் கொண்டே எழுந்தான் சங்கீத்.

"ஏன் புறப்பட்டீங்க...?"

"அந்த கேஸட் உனக்கு வேண்டாமா...? திருவான்மியூர்ல ஒரு ஃப்ரண்ட் கிட்டே அந்த கேஸட் இருக்கு... ஏதாவது ஒரு காரணத்தைச் சொல்லி வாங்கிட்டு வர்றேன்..."

"என்ன?"

"சாயந்தரம் வர்றதாயிருந்தா ஆறுமணிக்கு மேலே வாங்க..."

"ஏன்?"

"அப்பாவும் அம்மாவும் சாயந்தரம் என்னையும் அண்ணனையும் பார்க்க வரலாம்... அவங்க இருக்கிறப்போ நீங்க வந்தா ஃப்ரீயா பேச முடியாது."

சங்கீத் சிரித்தான்.

"ஓகே. ஆறு மணிக்கு மேலேயே வர்றேன்... நான் வந்துட்டு போனதா உன்னோட பிரதர்கிட்டே சொல்லிடு ஆர்த்தி...!"

"சரி சொல்லிடறேன்."

ஆர்த்தி தலையாட்டினாள்.

"சாயந்தரம் பார்ப்போம்."

சங்கீத் போர்டிகோ படிகளில் நழுவி - தூணுக்குப் பின்னால். - அஸ்தமித்தான் தொடர்ந்து -

ராஜ்தூத் ஸ்டாண்ட் விடுபடுகிற சத்தம் பின்-ஸ்டார்ட் ஆகி நகர்ந்து... சத்தம் தேய்ந்து.. தேய்ந்து...

அவளுடைய முதுகுக்குப் பின்னால்-

வீர்சிங்கின் குரல் கேட்டது.

"வெரிகுட் பாப்பா... பையனை அற்புதமா சமாளிச்சே... நீ துளி வார்த்தை பிசகியிருந் தாலும் போதும் - உன்னோட சங்கீத்துக்கும் இந்த சமுத்திரக் கரையோரமா ஒரு குழ் வெட்ட வேண்டி இருந்திருக்கும்..."

வீர்சிங்கின் பின்னால் வந்த ஜெயபால்-ஆர்த்தியை நெருங்கினான்.

"இனி ஒருத்தரும் வரமாட்டாங்களே...?"

"ஊஹூம்... வரமாட்டாங்க..."

"கீழே எங்கேயோ ப்ளட் ஸ்ட்ரெயின்ஸ் தெரிஞ்சதா சங்கீத் சொன்னானே... அதைக் கொஞ்சம் சுத்தம் பண்ணிடு..."

"கிராதகா...!"

ஆர்த்தி தலையசைத்தாள்.



"பாப்பா... உன்னோட சங்கீத் கண்ணுல படட்டும்னு வேணு மின்னே அந்த ரத்தக் கறையை விட்டு வெச்சியா?"

தட்-டென்று நிமிர்ந்தாள் ஆர்த்தி.

கண் நிறைய அதிர்ச்சி.

"அப்படி எதுவும் இல்லை... அவர் சொன்னப்பதான் நானே பார்த்தேன்..."

வீர்சிங் சிரித்தான்.

"உன்னை நம்பறேன்..."

சொன்னவன் ஜெயபாலிடம் திரும்பினான்.

"ஜெயபால்... பழையபடி நீ மேலே போய் வாட்ச் பண்ணிட்டு இரு யாராவது வர்றாங் களான்னு... பாரு."

ஜெயபால் "சரி" சொல்லி மாடிப்படிகள் ஏறினான்.

"ஆர்த்தி-அதை சுத்தம் பண்ணிடு..."

"ம்."

ஆர்த்தி இடம் பெயர்ந்து ஈரத் துணி ஒன்றை எடுத்து வந்தாள்.

வீர்சிங் அறை முழுக்க நகர்ந்து வேறெந்த இடத்திலாவது இதே மாதிரி ரத்தக்கறை இருக்கிறதா என்று பார்வையிட்டான்.

ஆர்த்தி குனிந்து அமர்ந்து அந்த ரத்த 'டாட்'களைத் துடைத்தாள்.

துடைக்கத் துடைக்க -

தன்மேல் குறுகுறுவென்று ஏதோ படிந்த மாதிரி உணர்ந்து -

சடாரென நிமிர்ந்தாள்.

வீர்சிங்கின் பார்வை!

வித்தியாசம் தட்டுகிறது பார்வை.

ஆர்த்தி பயமாய் நிமிர்ந்து பார்த்ததும் -

காதுவரை ஒரு இளிப்பு இளித்தான். இளித்துக் கொண்டே கேட்டான்.

"இனிமே யாரும் வரமாட்டாங்க இலையா பாப்பா...?"

நெஞ்சுக்குள் பய எஞ்ஜின் ஓட -

முகத்தில் கேள்விக் குறியோடு வீர்சிங்கைப் பார்த்தாள்.

வீர்சிங் சொன்னான்.

"நிஜம்மாவே நீ ரொம்ப அழகா இருக்கே பாப்பா..."

## 7

கடவுளே நான் பயந்தது நிகழப் போகிறது...

எப்படி...?

எப்படி இந்த கிராதகர்களிடமிருந்து தப்ப?

நின்றிருந்த இடத்திலிருந்து கால்களைப் பெயர்த்துக் கொண்டு ஒவ்வொரு அடியாய் எடுத்து ஆர்த்தியின் பக்கம் வந்தான் வீர்சிங்.

ஆர்த்தியின் நெஞ்சில் தட தடப்பு தொடங்கியது.

துடைப்பதை நிறுத்தி-பதட்டத்தோடு எழுந்தாள்.

"வேண்டாம்... என்னை ஒண்ணும் பண்ணிடாதே..."

வீர்சிங் அவளின் வார்த்தை காதில் பதியாத மாதிரி உணர்ச்சி மாற்றம் இல்லாமல் நடந்து



நெருங்கிக் கொண்டிருந்தான். முகத்தில் புன்னகை சுழன்றிருந்தது.

ஆர்த்தி கையைக் குறுக்கு மறுக்காய் ஆட்டி விழிகளை பயத்தால் விரித்து சொன்னாள்.

"என்னை எதுவும் பணணிடாதே... நான் தான் நீ சொன்ன மாதிரியெல்லாம் நடந்துக் கிறேனே...?"

வீர்சிங் ரொம்பக் கிட்டத்தில் வந்திருக்க -

பின்வாங்கினாள் ஆர்த்தி.

"வேண்டாம்..."

தட்.

பின்புறம் சுவர் இடிக்க நின்றாள். குறு முயலாய் சுற்றும் முற்றும் பார்த்தாள்.

மூலை.

அப்படியும் இப்படியும் நகர முடியாத மூலை.

ஆர்த்தி ஒடுங்கி நின்றாள்.

அவளுக்கு இரண்டு பக்கமும் கையை அணை மாதிரி சுவரில் பதித்து நின்றான் வீர்சிங்.

ஆர்த்தி பேச்சிழந்து வீர்சிங்கைப் பார்த்தாள்.

கண்களால் கொஞ்சினாள்.

"என்னை ஒண்ணும் பண்ணிடாதே...!!"

இறுக்கமாயிருந்த வீர்சிங்கின் முகத்தி லிருந்து முதல் தடவையாய் புன்னகை வந்தது.

அவனுடைய கறுத்த உதடுகள் பிரிய-மெதுவாய்-

வார்த்தைகள் வந்தது.

"பயந்துட்டியா பாப்பா...?"

கேட்டவனைக் குழப்பம் வாங்கின முகத்தோடு பார்த்தாள்.

சிரிப்போடு தொடர்ந்தான்.

"நான் இன்னும் உன்னைத் தொடக்கூட இல்லையே... அதுக்குள்ளேயே இத்தனை பயமா பாப்பா...?"

குழப்பம் விலகாமல் அதே நிலையில் அவனைப் பார்த்துக் கொண்டிருக்க-

இரண்டு பக்கமும் சுவற்றில் ஊன்றியிருந்த கைகளை விலக்கி விட்டு -

பின்வாங்கி -

அவளைவிட்டு அகன்று போய் தள்ளி யிருந்த சோபாவில் போய் உட்கார்ந்தான் வீர்சிங்.

அவனின் செய்கைகளை ஆர்த்தி புரியாமல் பார்த்துக் கொண்டிக்க-

அவன் புன்னகையோடு சொன்னான்.

"பாப்பா! நீ எப்பேர்ப்பட்ட சூழ்நிலையில் இருக்கே... எங்களால எது முடியும்... உன்னால எது முடியாது... அப்படிங்கறதை நீ புரிஞ்சுக்கத் தான்... உன்கூட கொஞ்சம் விளையாடினேன்."

ஆர்த்தி நடுக்கத்திலிருந்து விடுபட்டாள். வியர்ப்பதை நிறுத்தினாள்.

"வேண்டாம். விளையாட்டுக்குக்கூட என்னை இந்த மாதிரி பயப்படுத்திடாதே... நிச்சயமாக நீங்க ரெண்டு பேரும் வெளியே போகிற வரைக்கும் உங்களுக்கு எதிரான முயற்சியில் நான் ஈடுபடவே மாட்டேன்..."

"குட்! அப்படின்னா போனதுக்கப்புறமா ஈடுபடுவேன்னு அர்த்தமா...?"



திடுக்கிட்டவளாய் அவனைப் பார்த்தாள்.

தலையை ஆட்டினாள் பயமாய்.

"நீங்க போனதுக்கப்புறம் உங்களை சுத்தமாய் மறந்திடறேன்...! போலீஸ்ல கூட சொல்லமாட்டேன்!"

"வெரிகுட்! சூழ்நிலையை நல்லா புரிஞ்சு கிட்டே!"

வீர்சிங் சொல்லிக் கொண்டிருந்தபோது-

மாடிப்படிகள் தடதடக்கும் சத்தம்.

வேக வேகமாய் - ஜெயபால் வந்து கொண் டிருந்தான்.

"என்ன ஜெயபால்?"

"வீர்சிங்! கார்ல யாரோ வர்றாங்க..."

"கார்லயா?"

"ம்!"

வீர்சிங் மோவாயை வழுவிக்கொண்டு ஆர்த்தியைப் பார்த்தான்.

"பாப்பா... யார் வர்றாங்கன்னு... போய்ப் பாரு..."

தவிப்பாய் எழுந்த ஆர்த்தி ஜன்னலருகே போய் எட்டிப் பார்த்துவிட்டு-வேக வேகமாய்-முகம் பூராவும் பதட்டத்தைப் புசிக் கொண்டு திரும்பி வந்தாள்.

படபடப்பாய் சொன்னாள்.

"எ...எ...என்னோட...அ...அம்மாவும், அ...அப்பாவும் வர்றாங்க... எங்க வீட்டு கார்தான் அது..."

தலையைக் கோதிக்கொண்டே வீர்சிங் தீவிர யோசிப்புக்குப் போனான்.

ஒரே நிமிஷம்.

தீர்மானத்துக்கு வந்தவனாய் நிமிர்ந்தான்.

"பாப்பா...இங்க பாரு..."

பார்த்தாள்.

"இப்போ உன்னை இந்த வீட்டுக்குள்ள வச்சு பூட்டிட்டு - நானும் ஜெயபாலும் சவுக்குத் தோப்புக்குள் மறைஞ்சிக்குவோம்... உங்க அப்பா, அம்மா பார்த்துட்டு வீடு பூட்டியிருக்குன்னு திரும்பி போயிடுவாங்க... அவங்க வந்து வாசல்ல நின்னுக்கிட்டிருக் கிறப்போ... நீ ஏதாவது சத்தம் கித்தம் போட்டேன்னா... உங்க அப்பா, அம்மாவோட உடம்புகளுக்குள்ளே இந்த ரிவால் வார்ல இருக்கிற ஆறு தோட்டாக்களும் பாய்ஞ்சுடும்... ஜாக்கிரதை."

ஆர்த்தி எதிர்ப்பில்லாமல் தலையசைத்தாள்.

"நா...நான்...சத்தம் போடலை...எங்க அப்பா, அம்மாவை ஒண்ணும் பண்ணிடா தீங்க..."

மளமளவென செயல்பட்டார்கள் இருவரும்.

பின் கதவைத் தாளிட்டார்கள். எல்லா ஜன்னல்களையும் இழுத்துச் சாத்தினார்கள்.

"ஆர்த்தி...பி கேர்ஃபுல்...உன் அண்ணன் மாதிரி மடத்தனம் பண்ணிவிடாதே... ரெண்டு உயிர் பலியாக காரணமா இருந்து விடாதே...! புத்திசாலித்தனமா வாயைப் பொத்திகிட்டு வீட்லேயே உட்கார்ந்திருக்கணும்..."

தலையாட்டினாள்.

சில நிமிஷங்களில் முன் கதவு சாத்தப் பட்டது. தாழிடப்படும் சத்தன். தொடர்ந்து பூட்டுகிற ஓசை. மறு நிமிஷம் நிசப்தம். வெளியே கடலின் இரைச்சல் மட்டும் லேசாய் கேட்டுக் கொண்டிருந்தது.

மூன்று நிசப்த நிமிஷங்கள் முடிவடைந்த போது-

உள்ளே கார் பிரவேசமாகி எஞ்சின் அணைக்கப்படும் சத்தம் கேட்டது.

தொடர்ந்து காரின் கதவுகள் திறக்கப்படுகிற ஓசை "க்ளக்...க்ளக்,"

அம்மாவின் குரல் தெளிவாய் கேட்டது.

"வீட்டைச் சுத்தி புல்லு வளர்ந்துடுச்சுங்க... வெட்டணும்... ஆளை ஏற்பாடு பண்ணுங்க..."

ஆர்த்தியின் மனம்... இதுதான் கடைசி சந்தர்ப்பம்... அம்மா, அப்பா மூலமாகத் தப்பிக்க ஏதாவது வழி இருக்கிறதா... என்று பரபரத்தது.

நான் சத்தம் போட்டால் - அடுத்த விநாடியே-

அவர்கள் - சவுக்குத் தோப்பிலிருந்து வெளிப்படுவார்கள்.

கோபப்படுவார்கள். தயவு தாட்சண்யம் பார்க்காமல் -

என் கண் எதிரே அண்ணனை சுட்டுக் கொன்ற மாதிரியே அப்பாவையும், அம்மா வையும்...

ந்நோ. வேண்டாம்... கத்தக்கூடாது... அது முட்டாள் தனம். வேறு ஏதாவது புத்திசாலித் தனமான வழி...?

மூளை பரபரவென்று யோசித்தது.

குரல் கொடுத்தால்... மெல்லிய குரல்...? பாம்பு சீறுகிற மாதிரியான குரலில் 'அம்மா...

அப்பா' என்று கூப்பிட்டு:, ஊஹூம்... பிரயோசனப்படாது.

என் குரலை வீட்டுக்குள் கேட்டதுமே -

"ஆர்த்தி... ஆர்த்தி எங்கிருக்கே?... என்னாச்சு...?" என்று பரபரக்க ஆரம்பித்து விடுவார்கள். அந்த பரபரப்பு என்னை காட்டிக் கொடுத்துவிடும்.

அப்புறம்...?

அம்மாவையும் அப்பாவையும் ஈவு இரக்கமில்லாமல் சுடுவார்கள். வேண்டாம்... அம்மாவும் அப்பாவும் உயிரோடு திரும்பி போகட்டும்...

நான் தப்பிக்க ஆசைப் பட்டு-ஏதாவது செய்யப் போக - அந்த ஆசை -

அம்மாவையும் அப்பாவையும் பலி வாங்கி விடும்.

வெளியே குரல் கேட்டது.

அப்பாவின் குரல்.

"வீட்டைப் பூட்டிவிட்டு இந்த ரெண்டு எங்கே போச்சுன்னு தெரியலையே?"

அம்மாவின் குரல் பதிலளித்தது.

"வரையறதுக்காக ரெண்டு பேரும் தோப் பக்கம்போயிருப்பாங்க போலிருக்கு... நா வீட்டைவிட்டு கிளம்பறப்பவே சொன்னேன் போன் பண்ணிட்டு போலாம்ன்னு நீங்கதா கேட்கலை..."

"சரி... இப்படி வந்து உட்கார்... பத் நிமிஷம் காத்திருந்து பார்ப்போம்... வரலை யன்னா கிளம்பிடுவோம்..."



"இனிமே இவங்களை பார்க்க வர்றதாயிருந்தா டூப்ளிகேட் சாவி கொண்டு வந்துடணும்..."

இருவரும் பேசிக்கொண்டே-

போர்டிகோ படிகளில் உட்கார்ந்தார்கள்.

"நம்ம பங்களா ரொம்பவும் ஒதுக்குப்புறமா இருக்கு... மரகதம். இதை வித்துட்டு ஆள் நடமாட்டம் இருக்கிற பக்கமா ஒரு பங்களாவை வாங்கிப் போடணும்..."

"உங்க மகன் ஒத்துக்கமாட்டான்... வரையறதுக்கு இந்த இடம்தான் நல்லாயிருக்குன்னு சொல்லுவான்..."

"நல்ல இடம்தான்... ஆனா அடிச்சுப் போட்டா... என்னு கேக்க இங்கே நாதி யில்லையே...?"

ஏதேதோ பேசிக் கொண்டிருந்துவிட்டு-

பத்து நிமிஷங்கள் கழிந்ததும் இருவரும் எழுந்தார்கள்.

அப்பா சொன்னார்.

"இந்த ரெண்டும் சாயந்தரமாத்தான் வரும் போலிருக்கு... நாம கிளம்புவோம்... சாயந் தரமா போன் பண்ணி பேசிக்குவோம்..."

பேச்சைத் தொடர்ந்து-

படிகளில் இறங்கும் சத்தம்.

தொடர்ந்து-

காரின் கதவுகள் விடுபடும் சத்தம். சாத்தப் படும் சத்தம். கார் எஞ்சின் உயிர் பிடிக்கும் சத்தம். மெல்ல ஹாரனிட்டு நகரும் சத்தம்.

பிறகு-

பிறகு!

நிசப்தம்.

# 8

அவர்கள் போன சிறிது நேரத்திற்குள்- வீர்சிங்கும், ஜெயபாலும் சவுக்குத் தோப்பி லிருந்து திரும்பி வந்தார்கள். வீட்டைத் திறந்து உள்ளே போனார்கள். எதிர்பட்ட ஆர்த்தியிடம் சொன்னார்கள்.

"பரவால்லை. சில்மிஷம் எதுவும் பண்ணலை...!"

கண்களில் நீர் நிறைந்திருக்க ஆர்த்தி பதில் பேசாமலிருந்தாள். ஜெயபால் சிகரெட்பற்ற வைத்துக்கொண்டு சோபாவில் சாய்ந்தான் வீர்சிங்கிடம் கேட்டான்.

"வீர்சிங் மணி எவ்வளவு?"

"பனிரெண்டு"

"பனிரெண்டாச்சா?"

என்றவன் ஆர்த்தியைப் பார்த்தான் ஜெயபால்.

"ஆர்த்தி உனக்குப் பசிக்கலையா?"

ஆர்த்தி மௌனிக்க-ஜெயபால் அடர்த்தி யாய் புகை விட்டுக்கொண்டே பேசினான்.

"அதெப்படி பசிக்காம இருக்கும்? காலை யிலிருந்து நீ நிறைய வேலை பண்ணியிருக்கே ஆர்த்தி! கண்டிப்பா பசிக்கும். எங்க ரெண்டு பேருக்கும் நல்ல பசி-சாப்பிட என்ன இருக்கும்...?"

ஆர்த்தி நிமிர்ந்தாள்.

"ரொட்டி இருக்கு..."

"எப்பவுமே மத்தியானம் ரொட்டிதானா?"



"இந்த பங்களாவுக்கு வந்தா ரொட்டிதான்."

"ரொட்டின்னா சாண்ட்விச்சா?"

"ஆமா...?"

"கொண்டுவா..."

ஆர்த்தி நகர்ந்தாள்.

நகர-

நகர-

வீர்சிங் ஜெயபாலிடம் சொன்னான்.

"ஜெயபால்! அம்மா டாக்டரம்மாவாக்கும்... சாப்பிடற பண்டத்துல எதையாவது வெச்சு குடுத்துடுவா... நீ எதுக்கும் பின்னாடியே போய்-ஒரு பார்வை பார்த்துக்க..."

ஜெயபால் தலையசைத்துவிட்டு-

ஆர்த்தியைப் பின் தொடர்ந்து போனான். பத்து நிமிஷநேரம் கழித்து-

ஜாம் தடவின ரொட்டித் துண்டுகளையும்- சாண்ட்விச்சுகளையும் பீங்கான் தட்டுக்களில் எடுத்துக் வந்தாள் ஆர்த்தி. அவர்களுக்கு முன்னால் வைத்துவிட்டு தள்ளி நின்றாள்.

"வா...ஆர்த்தி...நீயும் சாப்பிடு..." ஜெயபால் கூப்பிட்டான்.

"எனக்கு வேண்டாம்..."

"ஏன்?"

"பசியில்லை..."

"ஓ... அண்ணன் செத்துப் போன துக்கமா?"

சொல்லிக் கொண்டே ஒரு ரொட்டித் துண்டை எடுத்து வாய் நிறைய திணித்துக் கொண்டான் ஜெயபால்.

"சாண்ட்விச் அற்புதமா பண்ணியிருக்கே... பண்ணின கைக்கு ஒரு முத்தம் தாணும் போலிருக்கு....கையை நீட்டறியா ஆர்த்தி...? வீர்சிங் குறுக்கிட்டான்.

"ஜெயபால்... சீக்கிரம் சாப்பிட்டு மேலே போ... யாராவது திடீர்னு வந்து தொலைச்சிடப் போறாங்க..."

ஜெயபால் சீக்கிரமாய் சீக்கிரமாய் வாய்க்குள் ரொட்டித் துண்டுகளை திணித்துக் கொண்டு புறப்பட்டான்.

அவன் போனதும்-சாப்பிட்டுக் கொண்(ட)— வீர்சிங் கூப்பிட்டான்.

"பாப்பா"

வீர்சிங்கின் அழைப்பால் - நிமிர்ந்தாள், ஆர்த்தி. என்ன என்கிற மாதிரி பார்த்தாள்.

"செஸ் விளையாட்டுன்னா உனக்கு ரொம்பவும் இஷ்டமா...?"

"ம்"

"ஒரு கேம் போட்லாம்... போய் செஸ் போர்டைக் கொண்டு வா..."

வீர்சிங் சொன்னதும்-

ஆர்த்தியின் மனசுக்குள் எரிச்சல் மையம் கொண்டது. பேசாமல் மௌனமாய் நின்றாள்.

புன்னகைத்தான் வீர்சிங்.

"உங்கண்ணன் போயிட்ட கவலை... நீ இன்னும் அபாயத்திலேர்ந்து மீளாத சூழ்நிலைல... இப்படி இருக்கும் போது-எப்படி விளையாட முடியும்னு கேக்கறியா...?"

பாவி!



வீர்சிங் தொடர்ந்தான்.

"அண்ணன் போன கவலையைவிட கற்பு கற்புன்னு சொல்றாங்களே... அது உனக்கு பெரிசில்லையா ஆர்த்தி?"

திகிலோடு-அவனை ஏறிட்டுப் பார்த்தாள்.

"நீ... என்ன சொல்றே...?"

"இதோ... பார் பாப்பா...இங்கே உட்கார்ந் திருக்கிறது நீயும் நானும் மட்டுந்தான்... செஸ் விளையாடிட்டு இருந்தேன்னா மனசு அதுல தான் இருக்கும்... இல்லேன்னா நான் உன்னையே பார்த்திட்டிருப்பேன்... கொஞ்ச நேரம் போனா தொடத் தோணும்... அப்புறம் உன் உடம்போட விளையாடத் தோணும்..."

கேலி நிறைந்த வார்த்தைகளைக் கொட்டிய வீர்சிங்மெதுவாய் எழுந்து அவளருகே வந்தான். தன்னுடைய மூச்சுக் காற்று அவள்மேல் படும்படியாய் நின்று கொண்டு பேசினான்.

"உனக்கு எப்படி வசதி...? செஸ் விளை யாடலாமா... இல்லே... ஒருத்தரையொருத்தர் பார்த்துகிட்டு உக்கார்ந் திருக்கலாமா?"

'யு...ப்ளடி ராஸ்கல்?' மனசுக்குள் திட்டிக் கொண்டாள்.

"ம்...போ...செஸ் போர்டை எடுத்துட்டு வா..." வீர்சிங் உறும-

செஸ் போர்டை எடுக்க அந்த அறையை நோக்கிப் போனாள் ஆர்த்தி. அவள் அந்த அறைக்குள் நுழைந்ததும்-

காலடிச் சத்தம் எழாமல் முன்னால் முதுகைக் காட்டிக் கொண்டு போகிற ஆர்த்தியைப் பின் தொடர்ந்தான்.

ஆர்த்தி செஸ் போர்டு எடுக்கப் போன அறை-

அவளின் பெட்ரூம்.

# 9

தி.நகரில் அந்த நடுத்தர வீடு. டிஸ்டெம்பர் கரைந்து போன காம்பௌண்ட் சுவர். இரண்டடி அகல சிமெண்ட் பாதை பாதையின் இரு பக்கமும் கீரைச் செடிகள். நீல நீலமாய் பூப் படிந்து கிடந்தது. கதவுக்கு இடப்பக்கம் ஸ்டாண்ட் இடப்பட்ட இளம்பச்சைலூனா.

லூனாவுக்குச் சொந்தக்காரி தேவிகா வீட்டுக்குள் கட்டிலில் குப்புறப் படுத்துக் கொண்டு கன்னத்தில் கையூன்றி ஒரு மாத நாவலை பார்வையால் மேய்ந்து கொண்டு தெரிந்தாள்.

நெருக்கப் பூ தெளித்த மேக்ஸியில் இருந்தாள். சாதாரண பெண்ணுக்கும், மிக அழகான பெண்ணுக்கும் இடைப்பட்ட சுமாரான அழகில் ஒரு தோற்றம். அடர்த்தி குறையாத தலை முடிப் பிரதேசம். இரட்டைப் பின்னலாய்ப் பிரிந்து கிடக்க நீள விரலால் ஒரு பின்னலின் முடிச்சை தன்னிச்சையாய் சுழற்றிக் கொண்டிருந்தாள். கண்களில் கனவுத்தனம் இருந்தது. உலர்கிற உதட்டை அடிக்கடி ஈடுப்படுத்திக் கொண்டாள். அது அவளுடைய மேனரிஸம்.

நேரம் 12.25 ஆனபோது-

நாவலிலிந்து அவன் கவனத்தைப் பிரித்தெடுத்துக் குரைத்தது டெலிபோன்.

நாவலைக் கவிழ்த்து வைத்துவிட்டு



எழுந்து போய் டெலிபோனைத் தொட்டு ரிஸீவரைப் பிரித்தாள். காதில் உரசவிட்டு-

"ஹலோ..."

"தேவிகாவா...?"

கேட்ட குரலை அடையாளம் தெரிந்து கொண்டாள்.

பத்திரிகை ஆபீஸில் வேலை செய்கிற அவளுடைய அண்ணன் மாதவன்.

"என்னண்ணா திடீர் போன்?"

"அம்மா இல்லையா...?"

"ம்ஹூம்... கனகம் அத்தை ரொம்ப நாளா கூப்பிட்டே இருந்தாங்கன்னு இன்னிக்குத் தான் புறப்பட்டு போனா..."

"போகட்டும் உன்னோட எக்ஸாம் ரிஸல்ட் நம்பர் சொல்லு..."

"வாட்... ரிஸல்ட் வந்துடுச்சா...?"

"பி.டி.ஐயிலிருந்து இப்பத்தான் ரிசல்ட் கார்ட் வந்தது. உன்னோட நெம்பரைஎப்படியோ மிஸ் பண்ணிட்டேன்... சொல்றியா...?"

"சொல்றேன் குறிச்சுக்கறியா...?"

"சொல்லு..."

"டூ...சிக்ஸ்... எயிட்... ஒன் ...டூ... குறிச்சுட்டியா...?"

"ம்..."

"லைன்ல இருக்கேன் இப்பவே பார்த்து சொல்லண்ணா..."

"எடிட்டர் பார்த்திட்டிருக்கார்... இன்னும் அரை மணி நேரம் கழிச்சுதான் என் கைக்கும் வரும்... பார்த்துட்டு உனக்கு ஃபோன்

பண்றேன்... எங்கேயும் போயிடாதே வீட்லேயே இரு..."

"ஒரு நிமிஷம் அண்ணா..."

"என்ன...?"

"என்னோட க்ளோஸ் ஸ்ப்ரெண்ட்ஸ் ரெண்டு மூணு பேர் நம்பர்ஸை வாங்கிட்டு நான் உனக்கு போன் பண்ணட்டுமா...?"

"ம்... பண்ணு... அதுக்காக எல்லாருடைய நெம்பரையும் கேட்டுட்டு வந்துராதே... எடிட்டர் சத்தம் போடுவார்..." சொல்லிவிட்டு ரிஸீவரை சாத்தினான் மாதவன்.

தேவிகா துள்ளலாய் நகர்ந்தாள். மேக்ஸியை உதறிவிட்டு ஃப்ளேட் க்ரேப் ஸாரியை உடலுக்குக் கொடுத்தாள். கண்ணாடி முன்னால் வந்து அவசர மேக்கப் செய்தாள். மறுபடியும் டெலிபோனுக்கு வந்தாள்.

ஆர்த்தியின் டெலிபோன் நெம்பரை மனசுக்குக் கொண்டு வந்து சுழற்றினாள்.

நிசப்தம்.

மறுபடியும் சுழற்றினாள். நிசப்தம்.

மறுபடியும் சுழற்றினாள். நிசப்தம்.

கோபமாய் ரிஸீவரைக் கவிழ்த்தாள்.

கழுதை! பங்களாவில்தான் இருப்பேன் என்று சொல்லி விட்டுப் போனாளே... ஆர்த்தி. அங்கேயே போய் பார்க்கலாமா-? யோசித்துக் கொண்டே-

ஜன்னல் திட்டில் இருந்த மஞ்சள் நிற காட்ரெஜ் பூட்டைக் கையிலெடுத்துக்கொண்டு வெளியே வந்தாள். கதவைப் பூட்டினாள்.



லூனாவை ஸ்டாண்டிலிருந்து விடுவித்து-நகர்த்தி வீதிக்கு கொண்டு வந்தாள்.

ஸ்டார்ட் செய்து-

சாலையில் பறத்திக்கொண்டு பத்தாவது நிமிஷம் பட்டின பாக்கத்தை தாண்டினாள்.

## 10

சின்ன ஸ்டுலை இழுத்துப் போட்டாள். ஆர்த்தி. செல்ஃபின் மேல் ரேக்கில் இருந்த செஸ் போர்டை ஸ்டூலின் மேல் ஏறி எடுத்து விட்டு விடூலினின்றும் குதித்தாள். குதித்த வள் புடவையைச் சரிப்படுத்திக்கொண்டு திரும்ப

முகம் மாறி-நெஞ்சில் 'தடக்' கென்றாள்.

அறை வாசலில் வீர்சிங்- கோணலாய் சிரித்துக் கொண்டு நின்றிருந்தான். கண்களில் சிவப்பு ஏறியிருந்தது.

"பாப்பா..." என்று அழைத்துக் கொண்டே கன்னத்தைச் சொறிந்தபடி உள்ளே வந்தான்.

"செஸ் போர்டு கிடைச்சதா பாப்பா?"

"ம்..."

"இப்படியே இந்த ஃபோம் கட்டில்ல உக்காந்து விளையாடலாமா...?"

பயமாய் எச்சில் விழுங்கினாள் ஆர்த்தி.

"ஹாலுக்கே போயிடலாம்... இங்கே வேண்டாம்..."

"ஏன் பாப்பா?"

அவன் வார்த்தையில் கலந்திருந்த கொஞ்சல் தனத்துக்காக எரிச்சல் பட்டாள் ஆர்த்தி.

"இதோ பார்... உன்னுடைய பார்வையும் பேச்சும் சரியில்லை. நீ சொன்னபடியெல்லாம் கேட்டிருக்கேன். நீ என்னைத் தொட்டா என்னோட வாழ்க்கையே நாசமாயிடும்... தயவுபண்ணி எம் பக்கத்துல வராதே..."

வீர்சிங் சிரித்தான்.

"என்ன பாப்பா இப்படி பயப்படறே...? நான் ஒண்ணும் பண்ணிடமாட்டேன்... தைரியமா வந்து உட்கார்ந்து விளையாடு நான் உன்னோட அண்ணன் மாதிரி"- சொல்லிவிட்டு ஃபோமில் உட்கார்ந்தான்.

ஆர்த்தி தயக்கமாய் எதிரே நிரம்பினாள்.

போர்டை விரித்தாள். ராஜாக்களையும் - மந்திரிகளையும் - சிப்பாய்களையும் மேலே கொட்டினாள். ஈடுபாடில்லாமல் கட்டங்களில் நிறுத்தினாள். சிப்பாய்களை ஒவ்வொன்றாக எடுக்கிறபோது-

சட்டென-

அந்த நிமிஷம்- அவளுடைய வலதுகை விரல்களின் மேல்-கெட்டத்தனமாய்-

வீர்சிங்கின் கை பட்டது-

சட்டென் நிமிர்ந்தாள் ஆர்த்தி. வீர்சிங் இளித்தான்.

"என்ன பாப்பா...தப்புத் தப்பா ராஜாவையும், ராயியையும் நிறுத்தறே? வெள்ளைக் கட்டத்துல நிறுத்து..." சொல்லிக் கொண்டே கையைப் பற்றினான்.

ஆர்த்தியின் நெஞ்சு பூராவும் திகில் தீ பரவியது.

கையை இழுத்துப் பார்த்தாள்.



கையைப் பிடித்திருந்த வீர்சிங்கின் பிடி அழுத்தமாயிருந்தது. எஃகுப்பிடி.

ஆர்த்தி உதறினாள். "ச்சீ...விடு..."

வீர்சிங் விடாமல் ,அவள் முகத்தையே பார்த்தான். பார்த்துக் கொண்டே-

இரண்டு பேருக்கும் இடையே இருந்த செஸ் போர்டை மறுகையால் ஓரமாய் ஒதுக்கினான். இருவருக்கும் இடையே இருந்த இடைவெளி கொஞ்சம் குறைய-

திமிறினாள் ஆர்த்தி. ஆனால் அவளால் ஒரு அங்குலம்கூட அசை முடியவில்லை.

உட்கார்ந்த நிலையிலேயே-

கொஞ்சம் கொஞ்சமாய் - வீர்சிங்கை நோக்கி இழுபட்டுக் கொண்டிருந்தாள்.

"வேண்டாம்...வீர்சிங்...என்னோட அண்ணன் மாதிரின்னு நீ தானே சொன்னே?"

"அண்ணன் மாதிரிதானே? நான் நிஜமாவே உன்னோட அண்ணன் இல்லையே...ம்...வா... ஒரு அரைமணி நேரம் என்னோட ஒத்துழைச்சடு போதும்... நீ ரொம்ப அழகாயிருக்கே பாப்பா... மனசு தறிகெட்டு பாயுது..."

"பூ... ராஸ்கல்...விடுடா..."

அலறினாள் ஆர்த்தி.

கண்களில் மின்னும் வெறியோடும்-வாயில் உறைந்துபோன இளிப்போடும்-ஆர்த்தியை இழுத்து-அவள் இடுப்பில் கை வைத்தபோது-

"வீர்சிங்."

அறை வாசலில் கேட்ட குரலால் திரும்பினான் வீர்சிங்.

ஜெயபால்!

ஆர்த்தியை பற்றியிருந்த கையை விடுவித்தான் வீர்சிங்.

ஜெயபாலின் முகத்தில் கொஞ்சமாய்க் கோபம் தெரிந்தது.

"வீர்சிங்... இதுக்குத்தான் என்னை மேலே அனுப்பினியா?"

வீர்சிங் முகம் மாறிப்போய் சில விநாடி அவனைப் பார்த்தான்.

"ஸாரி, ஜெயபால்... கொஞ்சம் தடுமாறிட்டேன்..."

ஜெயபாலின் வார்த்தைகளுக்காக - ஒரு விநாடி சந்தோஷப் பட்ட ஆர்த்தி அடுத்த விநாடி அவன் உதிர்த்த வார்த்தைகளால் அதிர்ந்து போனாள்.

"வீர்சிங்... நீ தடுமாறியது தப்பில்லே... ஒரு வார்த்தை என்னையும் கூப்பிட்டிருக்க வேண்டாமா...?"

வீர்சிங் மலர்ந்தான்.

"இப்ப என்ன கெட்டுப் போச்சு...? உள்ளே வா... இந்த கதவை தாழ்ப்போடு..."

ஆர்த்தி பொடிப் பொடியாய் உதிர்ந்து போனாள்.

"அது இப்ப முடியாது வீர்சிங்..."

"ஏன் முடியாது...?"

ஆர்த்தியிடம் திரும்பினான் ஜெயபால்.

"யாரோ லூனா மொபெட்ல வர்றாங்க..."

ஆர்த்தி அசுவாச மூச்சுவிட்டாள். சல்வார் துப்பட்டாவை ஒழுங்காக சுற்றிக் கொண்டு தள்ளி நின்றாள்.



"ஆர்த்தி அது யாருன்னு போய் பாரு...?"

அவசர அவசமாய் மூன்று பேரும் ஹாலுக்கு வந்தார்கள்.

ஆர்த்தி ஜன்னலை நோக்கி போனாள். கம்பிகளின் வழியே தலையை நுழைத்து எட்டிப் பார்த்தாள். லேசாய் மலர்ந்தாள்.

வந்து கொண்டிருந்தது-

தேவிகா!

"ஆர்த்தி...யார் அது...?"

"என்னோட ஃப்ரெண்ட்..."

"எதுக்கு வர்றா?"

"தெரியலை..."

"மறுபடியும் மறுபடியும் உன்னை வார்ன் பண்ண வேண்டிய தில்லைன்னு நினைக்கறேன்... நீ ஏதாவது தப்பா நடந்துகிட்டா உன் ஃப்ரெண்ட்கிட்ட நாங்க தப்பா நடந்துக்குவோம்... அவ உயிரோட திரும்பிப் போக மாட்டா..."

ஆர்த்தி தலையசைத்தாள். வரப்போகிற தேவிகா என்னை எந்த விதத்தில் காப்பாற்றப் போகிறாள்? என்னை மாதிரியே அவளும் ஒரு பலஹீனமான பெண்...

கொஞ்ச நேரத்துக்கு முன்னால் இந்த இரண்டு பேரின் நடத்தை!

என்னை அனுபவிக்கிற ஆசை அவர்களுக்குள் துளிர் விட்டாயிற்று. இனிமேல் தடுக்க முடியாது.

தேவிகா!

ஒரு தற்காலிக ஒத்தி வைப்பு. கொஞ்சம்

தாமதப்படுத்துகிறதிரை. அவள் விலகிப் போனதும் மறுபடியும் என்னை... இவர்கள்...?

வாசல் பக்கம் ஹாரனா சத்தம் கேட்டது.

பிஸ்டலை காட்டிக்கொண்டே - வீர்சிங்கும், ஜெயபாலும் வீட்டுக்குள் பக்க அறைக்குள் நுழைந்து கொண்டார்கள்.

ஒரு நிமிஷக் கழிப்பில் -

ஆர்ப்பாட்டமாய் மொபெட் சாவியை சுழற்றிக் கொண்டு ஹாலுக்குள் பிரவேசித்தாள் தேவிகா.

"ஹாய் ஆர்த்தி..."

ஆர்த்தி செயற்கைதனமாய் முறுவலித்தாள். கலைந்துபோன தலையை கோதிவிட்டுக் கொண்டாள்.

"வா...தேவிகா" என்றாள் ஹீனமான குரலில்.

"எக்ஸாமுக்கப்புறம் இதையும் சேர்த்து எத்தனை தரம் நான் உன்னைப் பார்க்க வந்துட்டேன்... ஒரு தரமாவது நீ என்வீட்டுக்கு வந்தியா... பெரிய மனுஷி மாதிரி நேத்தைக்கு காலையில எனக்கு போன் பண்ணி இந்த பங்களாவுக்கு போறதா சொல்லிட்டு வந்தே...?"

"ஸாரி...தேவிகா..."

"ஆஹா... ஒரு வார்த்தை உங்களுக்கெல்லாம் கிடைச்சு தப்பா... ஸாரியாம் ஸாரி...!"

திட்டின தேவிகா உதட்டைக் கடித்தபடி சுற்றும் முற்றும் பார்த்தாள்.

"எங்கே உன்னோட் ப்ரதர்...தி கிரேட்டஸ்ட் ஆர்டிஸ்ட் ஆஃப் இந்தியா...?"



சங்கீத்திடம் சொன்ன பொய்யையே தேவிகாவிடமும் அவிழ்த்தாள் ஆர்த்தி. சொன்னபோது மனசின் வருத்தம் குரலைப் பிசிறடிக்க வைத்தது. எந்த நிமிஷமும் அழுதுவிடுவாள் போல் தோன்றியது.

"ஒரு நாளைக்கு ரெண்டு மணி நேரம் உன்னோட அண்ணன் நம்ம உலகத்துக்கு வருவாரா?"

நிமிர்ந்தாள் ஆர்த்தி.

"என்ன சொல்றே....?"

"இருபத்தி நாலு மணி நேரமும் ஓவிய உலகத்திலேயே மூழ்கியிருக்காரேன்னு கேட்டேன்..."

ஆர்த்திக்கு பதில் வராமல் தொண்டை அடைத்தது. கண்களில் நீர் மின்ன பார்த்தது.

'அவர் இப்ப இருக்கறதே வேற உலகம் தானே'

"என்ன பதிலையே காணோம்...?"

ஆர்த்தி கட்டாயமாய்ப் புன்னகைத்தாள்.

"சரி...சரி. ரொம்பவும் அரட்டை அடிக்காதே! என்ன சாப்பிடறே? ஹாட் ஆர் கோல்ட்?"

"ஒரு எழவும் வேண்டாம்... ஆமா... போன் அடிச்சு அடிச்சுப் பார்த்தேன். ஒரு சத்தத்தையும் காணோம். அவுட் ஆஃப் ஆர்டரா?"

"ஆமா."

"கம்ப்ளைண்ட் பண்ணியிருக்கியா...?"

"ம்."

"இங்கே பக்கத்திலே வேற வீடுகளே இல்லே எப்படி கம்ப்ளைண்ட் பண்ணினே...?"

"இதே போன்லதான். இங்கிருந்து பண்ண லாம்... மத்தவங்க யாராவது இந்த நம்பருக்குப் போன் பண்ணினா ரிஸீவ் ஆகறதில்லே..."

தேவிகா எழுந்தாள்.

"இங்கிருந்து பண்ண முடியும்தானே...? என் அண்ணன் கூட கொஞ்சம் பேசணும்..."

சொல்லி -

டெலிபோனை நோக்கி நடக்க ஆரம்பித்த தேவிகாவைக் கலவரமாய்ப் பார்த்தாள் ஆர்த்தி.

"தேவிகா..."

நின்றாள் தேவிகா.

திரும்பி, "ம்?"என்றாள்.

"நான் கம்ப்ளைன்ட் பண்ணினப்போ அந்த அளவுக்காவது வேலை செஞ்சது... இப்ப அதுவும் இல்லே... இங்கிருந்தும் போன் பண்ண முடியாது."

"நல்ல டெலிபோன்..." திட்டினாள் தேவிகா.

"வந்ததும் உன்னோட அண்ணனுக்கு எதுக்காக போன் பண்றே?"

"நம்ம ரிசல்ட் வந்தாச்சு ஆர்த்தி..."

"ரிசல்ட்டா? நாளைக்கு சாயந்திரம்தானே வரும்...?"

"என்னோட அண்ணன் மாலைக்குரல் பேப்பர்லேதானே இருக்கார்? நெம்பர்ஸ் இன்னிக்கே அங்கே வந்துடும்... உன்னோட நம்பரையும் மாலா, ரமணி, புவனா இவங்க மூணு பேரோட நம்பரையும் எழுதிக்கொடு.



நான் ரிசல்ட் டைப் பார்த்து சாயந்திரம் ஃபோன் பண்றேன். அதுக்குள்ளே போன் சரியாயிடும்..."

பாழாய்ப் போகிற ரிசல்ட்.

"தேவி... நாளைக்கே பார்த்துக்கிட்டா போச்சு... என்ன அவசரம்?"

சொன்னவளை விநோதமாய் பார்த்தாள் தேவிகா.

"உனக்கு என்னடி ஆச்சு? ஏன் என்னவோ போல சாவு வீட்டுக்குப் போயிட்டு வந்தவ மாதிரி இருக்கே...? ரிசல்ட்டை பத்தி சிரத்தையில்லாமே பேசறே...? உங்க நாலு பேரோட நெம்பர்களையும் வாங்கிட்டு போகத் தான் மெனக்கெட்டு இவ்வளவு தூரம் வந்திருக்கேன்... எழுதிக் கொடு..."

ஆர்த்தி அவஸ்தையாய் நெளிந்தாள்.

எப்படி...?

அவர்கள் சந்தேகப்படுவார்களே...!

நான் வேறொதாவது எழுதித் தருவேனோ என்று சந்தேகப்படுவார்களே...!

உள்ளே போய் அவர்களைக் கேட்டு விட்டே வருவோமா?

அதுதான் சரி.

எழுந்தாள் ஆர்த்தி.

"இரு தேவிகா... பேப்பர் பேனா எடுத்துட்டு வர்றேன்..."சொல்லிவிட்டு ஆர்த்தி நகர-

தேவிகா கூப்பிட்டாள்.

"நில்லடி..."

நின்றாள்.

"ஏன் ரொம்பவும் டல்லாயிருக்கே...?"

"இல்லையே... நல்லாத்தானே இருக்கேன்..."

"பொய் சொல்லாதடி... சினிமாவில வர்ற கமலா காமேஷ் மாதிரி நிறைய சோகம்..."

"ஒண்ணுமில்லை லேசா தலைவலி..."

சொல்லிவிட்டு வீர்சிங்கும் ஜெயபாலும் இருந்த அறைக்குள் நுழைந்தாள்.

உள்ளே ஆர்த்தி நுழைந்ததுமே-

வீர்சிங் தணிந்த குரலில் கூப்பிட்டான்.

"பாப்பா"

"ம்..."

"நீ இன்னும் கொஞ்சம் கலகலப்பா இருக்கணும்..."

"ம்... எப்படி என்னாலே அப்படி இருக்க முடியும்?"

ஆர்த்தியின் வார்த்தையில் அழுகை தெரிந்தது.

"என்னைக் கேட்டா...? இருக்கணும்னா இருக்கணும்... இல்லைன்னா... உனக்கு வந்திருக்கிற ஆபத்து உன் ஃப்ரெண்டுக்கும் வரும்... தேவையா...?"

ஆர்த்தி பதறினாள்.

"ப்ளீஸ் வேண்டாம்... அவ என்ன தப்பு பண்ணினா!..."

"அப்போ... ஒழுங்கா நடந்துக்க... மூஞ்சியைக் கொஞ்சம் சிரிச்ச மாதிரி வெச்சுக்க... சரி அவ இப்போ எதுக்காக இங்கே வந்திருக்கா...?"

ஆர்த்தி பதறினாள்.

"ப்ளீஸ் வேண்டாம்...அவ என்ன தப்பு பண்ணினா!..."



"அப்போ... ஒழுங்கா நடந்துக்க... மூஞ்சியைக் கொஞ்சம் சிரிச்ச மாதிரி வெச்சுக்க... சரி அவ இப்போ எதுக்காக இங்கே வந்திருக்கா...?"

"அவளோட அண்ணன் மாலைக்குரல் பேப்பர்ல ஒர்க் பண்றபா. ப்ரஸ்ஸுக்கு ரிசல்ட் இன்னிக்கே வந்துடுச்சு... என்னுடைய நெம்பரும் இன்னும் ரெண்டு ஃப்ரெண்ட்ஸோட நம்பரும் வேணும்ன்னு சொல்றா... நாளைக்கு நான் பேப்பர்ல பார்த்துக்கறேன்னு சொன்னா விடமாட்டேங்கறா... இப்பவே எழுதித்தான்னு அடம் பிடிக்கறா... நான் எழுதித் தாட்டுமா? வேண்டாமா?"

"எழுது. ஆனா... பேப்பரும் பேனாவும் எடுத்துட்டு வந்து என் முன்னாடியே எழுது..."

வீர்சிங் சொன்னபடி-

பேப்பரையும், பேனாவையும் எடுத்து வந்து அவன் பார்வையில் படும்படியாக வைத்துக் கொண்டு நம்பர்களை எழுதினாள்.

அவரவர் நம்பர்களுக்கு நேரரே பெயர்களை எழுதி-வீர்சிங்கிடம் நீட்டினாள்.

பேப்பர் முழுக்க ஒரு தரம் பார்வையை ஓட்டினான் வீர்சிங். பின்பக்கம் திருப்பிப் பார்த்தான். திரும்பவும் ஆர்த்தியிடமே கொடுத்தான்.

"சரி... கொடுத்துடு... சீக்கிரம் அவளை வெளியே அனுப்பு..."

தலையசைத்துவிட்டு ஹாலுக்கு வந்தாள் ஆர்த்தி. உட்கார்ந்திருந்த தேவிகாவிடம் பேப்பரை நீட்டினாள்.

"இந்தா தேவி..."

தேவிகா வாங்கி வானிடி பேக்கிற்குள் போட்டுக் கொண்டாள். போட்டபடியே கேட்டாள்.

"ஆமா... உள்ள ஏதோ பேச்சு சத்தம் கேட்ட மாதிரி இருந்தது... யார் கூடப் பேசினே?"

த்தட்டென்று அதிர்ந்தாள் ஆர்த்தி.

"இல்லையே... உள்ளே யாருமில்லையே?"

அவசரமாய் மறுத்துச் சொன்னாள் ஆர்த்தி.

"எனக்கு நீ பேசின மாதிரியே இருந்தது..."

"அண்ணன் வெளியே போறப்போ... பாக்கெட் ரேடியோவை ஆஃப் பண்ணாமே போயிட்டார். இப்போ தொழிலாளர் நிகழ்ச்சி ஆரம்பமானதும் பேச்சு சத்தம் வந்தது. நான்தான் ஆஃப் பண்ணினேன்... அந்த சத்தத்தைத்தான் நீ கேட்டிருப்பே" என்று ஒரு பொய்யை அவிழ்த்துவிட்ட ஆர்த்தி பேச்சை மாற்று வதற்காக கேட்டாள்.

"ரிசல்ட்டை எனக்கு எப்படி கன்வே பண்ணுவே...?"

புன்னகைத்தாள் தேவிகா.

"உனக்குத்தான் ரிசல்ட்டைப் பத்தி அக்கறையில்லையே...? நாளைக்குப் பேப்பர்ல பார்த்துக்கோ..."

ஆர்த்தி போலியாய் முறைத்தாள். பிறகு கேட்டாள்.

"இப்போ நேரா உன் அண்ணனோட பத்திரிகை ஆஃபீஸ்க்கா போறே?"

"ஆமா..."

சொன்னபடியே இருக்கையை விட்டு எழுந்தாள் தேவிகா.



"சரிடி ஆர்த்தி நான் கிளம்பறேன்..."

"ம்."

"தலைவலின்னு சொன்னியே... டேப்லெட் ஏதாவது சாப்பிடு... டேப்லெட் இருக்கா?"

"இருக்கு..."

"இன்னும் எத்தனை நாளைக்கு இங்கே டேரா...?"

"நாளைக்கு வந்துடுவேன்..."

"சரி... நான் வரட்டுமா... நாளைக்கு என்னோட வீட்டுக்கு வா."

"ம்...ம்"

ஆர்த்திக்கு தொண்டை விக்கியது. தேவிகா வாசலுக்கு போய் லூனாவை உதைத்தாள். கையை ஆட்டிவிட்டு கிளம்பினாள். மறுபடியும் தனிமை.

வீர்சிங் அவளுடைய முதுகுக்குப் பின்னால் கூப்பிட்டான்.

"ஆர்த்தி...உள்ளவா."

## 11

மாலைக்குரல் என்று சொன்ன போர்டு அலங்காரமில்லாமல் வெறும் எழுத்துக்களைச் சொல்லும் உத்தேசத்துடன் எழுதப்பட்டு இருந்தது. பழைய மோஸ்தர் கட்டிடம். சுவர்களில் நுணுக்க வேலைகள். நியூஸ் பிரிண்ட் வாசனை. வாசலில் சைக்கிள்கள், மொபெட்கள், கார்கள்.

செக்யூரிடியிடம் சொல்லிவிட்டு உள்ளே போனாள் தேவிகா.

மொபெட்டை பார்க்கிங்கில் தனித்து விட்டுவிட்டு-

தூரத்து வராந்தாவைப் பார்த்து நடந்தாள். உள்ளே பிரும்மாண்டமான இரும்பு சங்கதிகள். வெள்ளை பேப்பர் ரோலை-நியூஸ் பேப்பர்களாக மாற்றிக் கொண்டிருந்தது.

வராந்தாவுக்குள் நுழைந்து-வலது பக்கமாய் போன-

மாடிப் படிகளேறினாள். தேவிகா.

வரிசையாய் அலுவலக இயக்கம் நடைபெறும் அறைகளைக் கடந்து நடந்தாள். பத்தாவது கதவு மாதவனின் அறை. உள்ளே பிரவேசித்தாள். மாதவனின் இருக்கை உதட்டைப் பிதுக்கியது.

பக்கத்து சீட் ஐம்பது வயதிடம் கேட்டாள்.

"ஸார்...மிஸ்டர் மாதவனோட சிஸ்டர் நான்... அவரைப் பார்க்கணும்."

கண்ணாடியைத் திருத்திக் கொண்டு நிமிர்ந்தார் அவர்.

"மாதவனா?"

"ஆமா ஸார்..."

பக்கத்து சீட் இளைஞனிடம் திரும்பி, "எம்ப்பா ரவி... மாதவன் எங்கே? என்றார்."

"காண்ட்டீன் போயிருக்கான் ஸார்..."

"மாதவன் காண்ட்டீன் போயிருக்காராம்... உக்கார்மா... வந்துடுவார் இப்போ..."

"தாங்க்யூ ஸார்... நான் அங்கே போய்ப் பார்த்துக்கறேன்..."

விசாரித்துக் கொண்டு காட்டீனுக்குப் போனாள். ஸ்டீல் ஃபர்னிச்சர்கள் வரிசையாய்!



சொற்பத் தலைகள் டீ உறிஞ்சிக் கொண்டு தெரிந்தது. அவைகளில் மாதவனைத் தேடினாள் தேவிகா.

அந்த மூலையில் மாதவன் இவளைப் பார்த்துவிட்டிருந்தான்.

எழுந்து வந்தான். முகத்தில் புன்னகை அணிந்திருந்தான். நிழல்கள் ரவியை நினைவு படுத்துகிற தோற்றம். கொஞ்சம் உயரம் அதிகம்.

"ஒரு நிமிஷம் தேவி..."

சொல்லிவிட்டு காண்ட்டீனின் சமையலறைப் பக்கம் போய் மறைந்தான்.

மரு நிமிஷ நேரம்.

திரும்பி வந்தான்.

"வாயைத் திற..."

"எதுக்கு?"

"சர்க்கரை. உன் வாயில் போட" - உள்ளங்கையைப் பிரித்து சொன்னான். "நீ பாஸாயிட்டே!"

"இப்ப நான் சர்க்கரை சாப்பிடற மூடில் இல்லேன்னா..."

"ஏன்?" என்றான் மாதவன் புரியாமல்.

தேவிகா சொன்னாள்.

"என்னோட ஃப்ரெண்ட் ஆர்த்தி ஏதோ ஆபத்துல இருக்கா!"

## 12

"உள்ளே வா ஆர்த்தி..." என்று சொன்ன வீர்சிங்கை ஆர்த்தி பயமாய்ப் பார்த்தாள்.

உள்ளே வந்து கொண்டே- மறுபடியும் கெஞ்ச ஆரம்பித்தாள்.

"வேண்டாம்... என்னை விட்டுடுங்க..."

வீர்சிங் இளித்தான்.

"வேண்டாமா...?" உன்னை மாதிரி ஒரு அழகான பொண்ணை நாள் பூராவும் ஒரு தனி வீட்ல வச்சிருந்துட்டு- தொடாம போனா எங்களைப் போல முட்டாள்கள் யாருமே இருக்க மாட்டாங்க... ஒரு ஒரு மணி நேரம் உன்னோட உடம்பைக் கொடு போதும்..."

"வீர்சிங்... ப்ளீஸ்... உங்க ரெண்டு பேரையும் காட்டிக் கொடுக்காம நான் எவ்வளவு தூரம் ஒத்துழைச்சேன்... நீங்க சொன்ன வார்த்தைக்கு மதிப்பு கொடுத்து நடந்துட்டு வந்திருக்கேன்... கடைசியில உங்க புத்தியை காட்டிட்டீங்க..."

ஆர்த்தி சொல்லச் சொல்ல... சிரித்தான் வீர்சிங்.

"பாப்பா... நாங்க ரெண்டு பேரும் ரொம்பவும் மோசமான ஆசாமிகள் தான்... அதிலும் உன்னை மாதிரி ஒரு அழகான பொண்ணை பார்த்துட்டா... இன்னும் மோசம்..."

ஆர்த்தி ஸ்தம்பித்து போய் நின்றிருந்தாள்.

வீர்சிங் தொடர்ந்தான்.

"பாப்பா... நாங்க சாயந்தரம் ஆறு மணிக்கு மேலே இந்த வீட்டை விட்டு போனதுக்கப்புறமா நிச்சயமா நீ உன் வேலையைக் காட்டுவே. போலீஸ்ல எங்களைப்பத்தி சொல்லுவே... என்னோட அடையாளத்தையும் ஜெயபாலோட அடையாளத்தையும் அட்சரம் பிசகாமே சொல்லுவே... நாங்க பண்ணின



கொலைகளுக் கெல்லாம் இருக்கற ஒரே சாட்சி நீதான். உன்னை உயிரோடு விடலாமா? ஸோ... உன்னை ஆறுமணி வரைக்கும் தொட்டுப் பார்த்துட்டு - அதுக்கப்புறம் உங்கண்ணன் பக்கத்திலேயே உன்னையும் அடக்கம் பண்ணிட்டு போலாம்ங்கற முடிவுக்கு வந்துட்டோம்..."

ஆர்த்தி உறைந்துபோய் நின்றிருந்தாள்.

என்ன செய்யலாம்?

இவர்களிடமிருந்து எப்படி தப்பிக்கலாம்?

செத்தாலும் சரி... இவர்களுக்கு இரங்கக் கூடாது.

ஆர்த்தியின் மனம் எம வேத்தில் யோசிப்பு நடத்தினது.

கண் அந்த மூலை டேபிளுக்குப் போயிற்று.

அங்கே...

ஆர்த்தி எதுவும் செய்யமாட்டாள் என்கிற தைரியத்தில் பாதுகாப்பில்லாமல் வைக்கப் பட்டிருந்த யாஷிகா காமிரா... ஆர்த்தியின் மூளை செல்கள் பரபரத்தது. 'ஆர்த்தி அதை எடு...!'

குபீர் பாய்ச்சல் அந்த மேஜையைப் பார்த்து!

அவர்களிரண்டு பேரும் என்ன ஏது என்று தீர்மானிக்கும் முன்பாக-

காமிராவைக் கையில் பற்றினாள் ஆர்த்தி.

'உடை ஆர்த்தி...!' மூளை சொல்லித் தந்தது

காமிரா பிடித்த கையை வேகமாய் ஓங்கி...

"ஆர்த்தி..."

வீர்சிங் அலற அலற-

பக்கச் சுவரைக் குறி வைத்து வீச-

'ப்பட்ட்ட்டீஈஈர்ர்'

சிதறு தேங்காய் சைஸில் சுவரில் அடி பட்டுச் சிதறியது காமிரா.

வீர்சிங் திகைத்துப்போய் நிற்க-

ஜெயபால் கோபத்தின் உச்சத்துக்குப் போய் - இடுப்பிலிருந்து ரிவால்வரைக் கையிலெடுத் தான்.

ஆர்த்தி தைரியமாய் நின்றாள்.

'எனக்குத் தெரியும்'

'என்னைச் சுட மாட்டார்கள்'

'முழுசாய் ஒருதரமாவது என்னைத் தொடாமல் கொல்ல மாட்டார்கள்.'

அதற்குள் தப்ப வேண்டும். எப்படித் தப்ப?

ஆர்த்தி நினைத்த மாதிரியே-

ஜெயபால் ரிவால்வரைச் சுண்டப் போன போது-

வீர்சிங் தடுத்தான்.

"ஜெயபால் சுட்டுடாதே...! அவ நமக்கு வேணும்... ஒரு தடவையாவது அவ நமக்கு வேணும்... ஆத்திரப்படாதே...!"

ஜெயபால் ரிவால்வரைத் தாழ்த்தினான்.

## 13

காண்டீன் மேஜைகளில் ஒன்றைத் தேர்ந்தெடுத்து இருக்கைகளில் நிரம்பினார்கள் மாதவனும், தேவிகாவும். இருவரும் பதட்ட மாய் தெரிந்தார்கள்.



"என்ன தேவி சொல்றே"

"அண்ணா கொஞ்சநேரத்துக்கு முன்னாடி ஆர்த்தியோட நெம்பர் வாங்க அவளோட பீச் பங்களாவுக்குப் .போயிருந்தேன்... உள்ளே போனப்பவே அவ முகம் சரியில்லை. பேசின தும் கலகலப்பாயில்லை. அவ நடத்தை வித்தி யாசமா பட்டது... அதை உறுதிப் படுத்துகிற மாதிரி... டெலிபோன் அவுட் ஆஃப் ஆர்டர்னு சொன்னா...ஆனா...டெலிபோன் ஒயர் பலாத்காரமா பிடுங்கப் பட்டிருக்கு...உள்ளே போய் யாரோ கூட பேசிட்டு வந்தா. நான் கேட்டா பாக்கெட் ரேடியோன்னு சொன்னா... அவளோட அண்ணனையும் காணோம். அவ மட்டும் வீட்ல தனியா இருக்கா. கண்ணுல பயம் பேசற பேச்சுல பயம் அந்த வீட்ல ஆர்த்தி ஏதோ ஆபத்துல மாட்டிட்டிருக்கா..."

மாதவனின் முகம் வெகுவாய் மாறியிருக்க- தேவிகா தொடர்ந்தாள்.

"அண்ணா அது தனி பங்களா...கண் எட்டின தூரம் வரைக்கும் வேற பங்களாவை பார்க்க முடியாது... வீட்ல அவ அண்ணனையும் காணோம்...சவுக்குத் தோப்புல வரையறார் அப்படி இப்படின்னு சொன்னாள். அது நம்பற மாதிரி எனக்குத் தெரியலை... யாராவது அவளுக்கு வேண்டாதவங்க... அண்ணனை அடிச்சு போட்டுட்டு உள்ளே புகுந்து ஆர்த்தியை மிரட்டி வச்சிருக்களோன்னு சந்தேகமா இருக்கு... எல்லாத்துக்கும் மேலா ரிசல்ட் பார்க்க நம்பர் கொடுன்னு கேட்டா ஏதேதோ நம்பர் எழுதிக் கொடுத்திருக்கா..."

மாதவன் அவளைப் பார்த்தான்.

"தேவி...ஆர்த்தி எழுதிக் கொடுத்த அந்த பேப்பரை குடு பார்க்கலாம்..."

தேவிகா ஹேண்டி பேக்கைத் திறந்து அந்தப் பேப்பரைக் கொடுத்தாள்.

பேப்பரில் பார்வையைப் பதித்தான் மாதவன்.

14 5 5 4 - ஆர்த்தி

16 15 12 9 3 5 - மாலதி

8 5 12 16 - புவனா

குழப்பமாய் மாதவன் நிமிர்ந்தான்.

"தேவிகா... இது என்ன நம்பர்ஸ்... பரீட்சை ரிசல்ட் நெம்பர்ஸ் மாதிரி இது தெரியலை."

மாதவன் பேப்பரை உற்று உற்று பார்த்தான்.

## 14

ஆர்த்தி தேவையில்லாமல் ஹாலில் நான்கு மூலைகளையும் நோக்கி ஓட-வீர் சிங்கும் ஜெயபாலும் சிரித்தார்கள். ஒரு மூலையில் போய் தஞ்சமடைந்த அவளை - பக்கத்திற்கொருவராய் நெருங்கினார்கள்.

"பாப்பா தப்பிச்சு போற அளவுக்கு உனக்குத் தைரியம் வந்திடுச்சா...?"

கேட்டபடியே-

மிகக்கிட்டத்தில் வீர்சிங் வந்துவிட - ஹாலின் இன்னொரு மூலையை நோக்கி -

நெஞ்சு படபடக்க ஆர்த்தி ஓட ஆரம்பித்தாள்.

எப்படி சுற்றிச் சுற்றி ஓடினாலும்...



ஹால்...ஹால்...ஹால்...

துரத்துவது இரண்டு பேர்...! மூச்சிரைத்தது ஆர்த்திக்கு எதிலாவது குத்திக்கொண்டு செத்துப் போய்விடலாமா...? சுற்றும் முற்றும் பார்த்தாள். கண்ணுக்கு எதுவுமே தட்டுப்பட மறுத்தது.

ஓடி ஓடி வியர்த்து விழிந்தாள் ஆர்த்தி.

அந்த சோபாவுக்கும்-

மேஜைக்கும்-

இடையே புகுந்து புகுந்து அவர்களுக்கு போக்கு காட்டினாள்.

'எவ்வளவு நேரம் ஆர்த்தி...?'

'எத்தனை நேரம் இப்படி ஓடிக் கொண்டிருக்க முடியும்?'

அவள் நினைக்க நினைக்கவே-

அவளை இரண்டு பக்கமும் வியூகம் அமைத்து ஓரம் ஒதுக்கினார்கள் ஜெயபாலும் வீர்சிங்கும்.

நகர முடியாமல் மூலையோடு சேர்ந்தாள் ஆர்த்தி.

கிட்டத்தில் வந்து மூச்சுக் காற்று படும் தூரத்தில் புன்னகைத்தான் வீர்சிங்.

"ஓடி விளையாண்டு பார்க்கறியா... பாப்பா?"

கேட்டபடி தோளிரண்டில் கை வைத்தான் வீர்சிங்.

குலுங்கி வீறிட்டாள் ஆர்த்தி.

"ந்நோ... ந்நோ..."

இன்னும் சிரித்தான் வீர்சிங்.

"கத்து பாப்பா... இன்னும் கொஞ்சம் ஹை பிட்ச்ல கத்து... ஆசை தீரக் கத்து... கேக்கறதுக்கு இந்த ஏரியாவில் யார் இருக்கா...?"

செயலற்றுப் போய் அவனைப் பார்த்தாள்.

"ஜெயபால்"

"சொல்லு வீர்சிங்..."

"கிச்சன் பக்கம் கயிறு ஒண்ணை பார்த்த மாதிரி ஞாபகம்... போய் எடுத்துட்டு வர்றியா...?"

ஜெயபால் நகர்ந்து போனான்.

சில நிமிஷங்களில் திரும்பி வந்தான்.

கையில் நீளக் கயிற்றுச் சுருள்.

அதை வாங்கின வீர்சிங் ஆர்த்தியின் கையையும், காலையும் கட்ட ஆரம்பித்தான்.

ஆர்த்திக்கு உதறலெடுத்தது.

ஜெயபால் கேட்டான்.

"வீர்சிங்... எதுக்கு அவளைக் கட்டறே...?"

வீர்சிங் சிரித்தான்.

"சைட் டிஷ்ஷோட இவளை ருசிக்கணும்னு ஆசைப் படறேன்..."

"என்ன சொல்றே?"

"நம்ம கார்ல பிளாக் அண்ட் ஒயிட் இருக்கு... போய் எடுத்துட்டு வா... போதையோட இவளைத் தொடணும்... அப்பத்தான்த்ரில்..."

ஆர்த்தி தன் பெரிய கண்களை மலர்த்தி திகிலோடு மிரண்டாள்.



# 15

போலீஸ் ஸ்டேஷன்.

ஆர்த்தி எழுதித் தந்த காகிதத்தை இன்ஸ்பெக்டர் பார்த்திப ராஜன்கவனமாய் படித்துப் பார்த்தார். நாற்பது வயதுக்கு போய்க்கொண்டிருந்த பார்த்திப ராஜனும் அன்றைய மொடமொடப்பான யூனிபார்மில் மின்னினார்.

எதிரே உட்கார்ந்திருந்த தேவிகாவும் மாதவனும் இன்ஸ்பெக்டரையே- பார்த்துக் கொண்டிருந்தார்கள்.

"அந்தப் பங்களாவில் உங்க ப்ரெண்ட் ஆர்த்தி எப்பவும் மாதிரி கலகலப்பா இல்லை...?"

"ஆமா இன்ஸ்பெக்டர்..."

"டெலிபோன் ஒயர் பிடுங்கப்பட்டிருந் ததைப் பார்த்தீங்களா?"

"பார்த்தேன்..."

"அதைப் பத்தி உங்க ப்ரெண்ட்கிட்டே ஒண்ணும் கேக்கலையா?"

"அவ பொய் சொல்றான்னு தெரிஞ்சுடுச்சு... ஸோ... நான் அதைக் கிளற விரும்பலை..."

"உள்ளே பேச்சுக் குரல் கேட்டதா சொன் னீங்களே? ஆண்குரலா? பெண் குரலா?"

"ஆண் குரல் இன்ஸ்பெக்டர்"

"நீங்க வெளியே வரும்போது பங்களா வுக்கு கொஞ்சம்தள்ளி ஏதாவது வாகனம் கார், ஜீப் மாதிரி ஏதாவது நின்னுட்டிருந்ததா?"

"நான் கவனிக்கலை இன்ஸ்பெக்டர்..."

"ஆர்த்தியோட பிரதர் வீட்ல இல்லை?"

"இல்லை..."

மறுபடியும் பார்த்திபராஜன்- மோவாயைத் தேய்த்தபடி அந்த எண்களைப் பார்வை யிட்டார்.

ஒரு நிமிஷம்-இரண்டாவது நிமிஷம்-மூன்றாவது நிமிஷம் - நான்காவது நிமிஷத்தின் ஆரம்பத்தில் மலர்ச்சியோடு நிமிர்ந்தார்.

"மாதவன் ஒண்ணைக் கவனிச்சீங்களா?"

"என்ன இன்ஸ்பெக்டர்...?"

"எல்லா நம்பர்ஸுமே 26-க்குள்ள ஏதோ ஒரு நம்பர் இல்லையா?"

மாதவன் பார்த்தான்.

"ஆமா இன்ஸ்பெக்டர்."

"ஸோ... இந்த ஒவ்வொரு எண்ணும் ஒரு ஆங்கில எழுத்தைக் குறிக்குது..."

மலர்ந்தார்கள் மாதவனும் தேவிகாவும். "மே.பி. இன்ஸ்பெக்டர்."

அவர் தொடர்ந்தார்.

"அதாவது A-ல தொடங்கி ஒண்ணு ரெண்டுன்னு எண் கொடுத்து எழுதியிருக்கலாம்... இப்போ அதைப் போட்டுப் பார்த்துடலாம்..."

சொல்லிவிட்டு-

தாளின் பின் பக்கம் வரிசையாய் ABCD எழுதி ஒவ்வொன்றிற்கும் வரிசையாய் ஒன்றிலிருந்து எண் கொடுத்தார்.

அதன் உதவியோடு ஆர்த்தி எழுதின எண்களை ஆங்கிலமாய் மொழி பெயர்க்க



ஆரம்பித்தார் பார்த்திபராஜன். எழுத்துக்கள் சேர சேர மலர்ந்தார்.

முதல் வரிசை எண்கள்

14, 5, 5, 4 - NEED என்று வந்தது.

அடுத்து-

16, 15, 12, 9, 3, 5 - Police

அடுத்து -

8, 5, 12, 16 - HELP

NEED POLICE HELP!

## 16

போதைசமாச்சாரம் நிரம்பின பாட்டிலை டம்ளரில் சரித்து சரித்து-சோடா கூட கலக்காமல் - நெருப்பு மாதிரி வயிற்றுக்குவார்த்தார்கள். ஜெயபாலும் வீர் சிங்கம்.

நிதானமிழக்காமல் இருந்தார்கள்.

"ஜெயபால்..."

வீர்சிங்கின் அழைப்பால் நிமிர்ந்தான் ஜெயபால்.

"சொல்லு வீர்சிங்..."

"இனிமே... அவளோட கட்டையெல்லாம் அவிழ்த்துவிடு..."

ஜெயபால் அவளை நெருங்கினான்.

ஜெயபால் ஒரு கையால் ஆர்த்தியின் தோள்பட்டையை இரும்புத்தனமாய் பிடித்துக் கொண்டு மறுகையால் - கயிற்றைத் தளர்த்த ஆரம்பித்தான்.

முழுசாய்த் தளர்த்தி முடித்ததும் -

அவன் போதையில் சற்று நிதானித்த விநாடி-

பட்-டென அவனை உதறிவிட்டு-

பேய்த்தனமாய் சமையலறையைப் பார்த்து ஓட ஆரம்பித்தாள்.

"முட்டாளே! பிடி... பிடி... பின்பக்கக் கதவைத் திறந்து ஓடிடப் போறா..." வீர்சிங் கத்தினான்.

'தட்...தட்...தட்...' ஆர்த்தி தலைதெறிக்க ஓட -

ஜெயபால் துரத்தில் கொண்டு பின்னால் பாய்ந்தான்.

ஹாலையும் - இரண்டு மூன்று அறைகளையும் கடந்து சமையல் அறைக்குள் நுழைய நுழையவே விருட்டென்று திரும்பி - ஆர்த்தி கதவைச் சாத்தினாள்.

"ச்சட்டீர்..."

கதவை அழுத்திப் பிடித்து தாழிடுவதற்குள்-

பிசாசுத்தனமாய் பாயந்து வந்த ஜெயபால் கதவின் மேல் விழுந்து தள்ளினான். அவனுடைய தள்ளலுக்கு ஈடுகொடுக்க முடியாமல்-

கதவை விட்டு விட்டு-

பாத்திர ஸ்டாண்டுக்குத் தாவினாள் ஆர்த்தி.

பாத்திரங்களுக்கு நடுவே தெரிந்த - அந்த காய்கறி நறுக்குகிற கத்தியை எடுத்துக் கொண்டாள்.

அரையாடி நீளத்தோடு-சிவப்புப் பிடியோடு மின்னுகிறகத்தி. கூர்மை அபாரமாய் தெரிந்தது. ஜெயபாலை நோக்கி நீட்டினாள்.

"டேய். கிட்டே வராதே..."



"வந்தா என்னடி பண்ணுவே?..."

ஜெயபால் அலட்சியமாய் முன்னேறி வந்தான். பாக்குக் கறை பற்களால் சிரித்தான்.

"வராதே குத்திடுவேன்..."

கத்தின ஆர்த்தியின் விரல்கள் நடுங்கின.

மெதுவாய் முன்னேறி வந்த ஜெயபால்-

குபீரென - ஆர்த்தியின் மேல்-

ஒரு புலி பாய்ச்சலை நிகழ்த்தினான்.

ஆர்த்தியின் கையை எட்டிப் பிடித்தான். கீழ் நோக்கி வளைத்து-மணிக்கட்டில் வலியை உண்டாக்கினான்.

"சுட்டுக்கொல்றது - கையில் கத்தி எடுக்கிறதெல்லாம் எங்க வேலை ஆர்த்தி... நீயெல்லாம் இப்படி கஷ்டப்படலாமா...?"

அவன் மணிக்கட்டை அழுத்தின அழுத்தலில்-

"அம்மா...ஆ..."

வலி தாங்காமல் ஆர்த்தியின் விரல்கள் தானாய் பிரிந்தது.

கத்தி தரையில் 'டிங்...டினார்' என்றது.

இரண்டு கையையும் மடக்கிப் பிடித்து-ஒரு பெரிய பூக்கொத்தை தூக்குகிற மாதிரி- ஆர்த்தியை அப்படியே கையில் அள்ளி-

அவள் துடிக்கத் துடிக்க-

படுக்கையறையை நோக்கிக் கொண்டு போனான் - ஜெயபால்.

"ச்சீ...விடுடா...ராஸ்கல்!"

"ஸாரி..."

"டேய்"

"நத்திங் டூயிங்... அடம் பிடிக்காமே இருந்தா பூப்போல ஹாண்டில் பண்ணுவோம்... எப்படி வசதி...?"

ஜெயபால் படுக்கையறைக்குள் பிரவேசித்தான்.

கையில் திமிறிக் கொண்டிருந்த ஆர்த்தியை ஃபோம் மெத்தையில் எறிந்துவிட்டு தன் சட்டையைக் கழற்ற ஆரம்பித்தான். வீர்சிங் படுக்கையில் விழுந்து ஆர்த்தியின் சேலைத் தலைப்பைத் தேடிக் கொண்டிருந்தான்.

## 17

ஜீப்பை ஜாக்கிரதையாக பங்களாவுக்கு கொஞ்சம் தள்ளியே ஊமையாக்கிவிட்டு-

கான்ஸ்டபிள்கள் சகிதமாய் ஆர்த்தியின் பங்களாவைப் பார்த்து பூனை நடையிட்டார் பார்த்திபராஜன்.

காம்பௌண்ட் கேட் திறந்தே கிடந்தது.

உள்ளே நுழைந்ததுமே-

சத்தமில்லாமல் சைகையாய் கட்டளைகளைப் பிறப்பித்தார் பார்த்திபராஜன்.

கான்ஸ்டபிள்கள் பங்களாவைச் சுற்றியிலும் சப்தமில்லாமல் பரவினார்கள்.

மெல்ல பங்களாவை ஒரு தரம் சுற்றி வந்தார் பார்த்திபராஜன்.

எல்லாக் கதவுகளுமே உட்புறம் தாளிடப் பட்டிருக்க-

யோசிப்போடு நின்றார்.



என்ன செய்யலாம்...?

சட்டென்று அந்த வாட்டர் ட்ரெய்னேஜ் சிமெண்ட் குழாய் கவனத்துக்கு வர -

பூட்ஸை கழற்றியெறிந்துவிட்டு-

மளமளவென மேலேற ஆரம்பித்தார்.

நிமிஷநேரத்துக்குள் மொட்டை மாடியின் மேல்!

பார்வையை சுழற்றினவருக்குள் சந்தோஷ மழை!

மொட்டை மாடிக்கதவு திறந்தே இருந்தது.

ரிவால்வரைக் கைக்கு கொண்டு வந்து-

படிகளில் உஷார்த்தனத்தோடு இறங்கினார்.

புல்வெளியில் நடக்கிற ஜாக்கிரதை உணர்வோடு நடந்து - படிகளை முடித்துக் கொண்டு- ஹாலுக்கு வந்தார். ஹால் பூராவும் ஒரு அரையிருட்டுத்தனம்.

சட்டென்று வலப்பக்கமிருந்த அந்த அறையிலிருந்து-

ஆர்த்தியின் அலறலான குரல்.

"ந்நோ... ராஸ்கல்... என்னை விடுடா..."

நாலே எட்டில் அந்த அறையோரம் வந்தார். உள்ளே எட்டிப் பார்த்தார். சேலையை பறி கொடுத்துவிட்டு உள்ளாடை சமாச்சாரங்களோடு மானத்தை காப்பாற்றிக் கொண்டு

பெரிது பெரிதான மூச்சு வாங்கி-

ஆர்த்தி அந்த இரண்டு பேரிடமும் போராடிக் கொண்டு

"ந்நோ"

- என்றபடி நிமிர்ந்தவளின் கண்களில் வாசலில் நின்றிருந்த பார்த்திபராஜன் தட்டுப் பட்டதும்-

"இன்...ஸ்...பெக்டர்..."

அலறலோடு ஓடி வந்து அவர்க்குப் பின்னால் வந்து ஒண்டினாள்.

அதிர்வோடு திரும்பின வீர்சிங்கும், ஜெய பாலும் கைகளைத் தங்கள் இடுப்பிலிருந்த ரிவால்வருக்குக் கொண்டு போவதற்குள்-

பார்த்திபராஜனின் கையிலிருந்த அரசாங்க பிஸ்டல்- அவர்க்கு விசுவாசமாய்-

இரண்டு பேரின் வலது தோள்களையும் குறி பார்த்து -

தோட்டாக்களை அனுப்பி தோள்பட்டை களை சிதறடித்தது.

டி.டி. அல்லது எம்.ஓ. இவைகளை R.S.Publication சூப்பர்ஹிட் நாவல், 64/2, நாட்டு சுப்புராயன் தெரு, மைலாப்பூர், சென்னை - 4. என்ற நிர்வாக அலுவலக முகவரிக்கே அனுப்ப வேண்டும் ஆசிரியர் & வெளியிடுபவர் ஆர். முரளி.

Owner & Published by R.Murali. at 64/2, Nattsubbraya Street, Mylapore, Chennai - 4. and Printed by Srinivasan Printers, Alwarpet, Chennai - 18.



## என்னவளே

உன்னை காணாத
நாள் எனக்கு இருட்டு தான்!
உன்னை ரசிக்காத
நாள் எனக்கு மௌனம் தான்!
உன்னை தரிசிக்காத
நாள் எனக்கு விரதம் தான்!
உன்னை வர்ணிக்காத
நாள் எனக்கு விவாதம் தான்!
உன்னை நினைக்காத
நாள் எனக்கு கண்ணீர் தான்!

- சாது ரவி, ஆரணி

## தானம்

உடல்
தானம் செய்த
கரப்பான் பூச்சியின்
இறுதி ஊர்வலத்தில்
ஆயிரம் எறும்புகள்

- செல்வராஜா

## பேசாத காதல்

கடவுள்
பேசவில்லை யென்று
வருத்தம் கொள்வோமா?
காதலியே
நீ பேசவில்லையென்று
வருத்தம் கொள்வேனா...